வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.08.2022 திங்கட்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 16

# சீன இராணுவத்துக்கு இடமளிப்பது நிலைமையை பாரதூரமாக்குமாம்!!

## அரசுக்கு கூட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 01

**இந்து சமுத்திரத்தில் சீனாவின் இராணுவ பிரசன்னம், இந்தியா நியாய பூர்வமான பாதுகாப்பு அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருப்பதாக தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு, சீன இராணுவ பிரசன்னத்துக்கு இடமளித்து நிலைமையை இலங்கை பாரதூரமானதாக்கக்கூடாது என்றும் எச்சரித்துள்ளது.**

நாட்டில் புதிய சர்ச்சையை தோற்றுவித்திருக்கும் விமானங்களை கண்காணிக்கும் சீன கப்பல் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், “சீனக்கப்பல் எதிர்வரும் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவிருப்பது பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. மற்றைய நாடுகளின் அதிகாரப் போட்டிகளில் நாம் பக்கம் சார்ந்து நடந்துகொள்வதில்லை.

ஆனால், இந்து சமுத்திரத்தில் சீனாவின் இராணுவ பிரசன்னம் இந்தியா நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். சீன இராணுவ பிரசன்னத்துக்கு இடமளித்து நிலைவரத்தை இலங்கை பாரதூரமானதாக்கக்கூடாது.“ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## 22ஆவது திருத்த வரைவு இன்று அமைச்சரவையில்!

கொழும்பு, ஓக. 01

அரசாங்கம் முன்மொழிந்த அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தின் புதிய வரைவு இன்று திங்கட்கிழமை அமைச்சரவை கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இன்றைய தினம் நடக்கும் அமைச்சரவை

15

## டெங்கு காய்ச்சலிலும் புதிய பிறழ்வு பரவுகிறது!

### மருத்துவ நிபுணர் எச்சிரிக்கை

கொழும்பு, ஓக. 01

டெங்கு காய்ச்சலின் புதிய பிறழ்வு அடையாளம் காணப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனவே, காய்ச்சல் ஏற்படின் உடனடியாக மருத்துவரை நாடுமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் கொழும்பு சீமாட்டி

15

## நீதிக்கான எமது அழுகுரல் புறக்கணிக்கப்பட்டுள்ளது

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஓக. 01

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகநபர்கள் இன்னமும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர். இதனால், “நீதிக்கான எங்கள் அழுகுரல்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளன”, என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி

15

## இலங்கையின் பெற்றோல் இருப்பு சாதாரண தேவைக்கும் போதாது!

### உலக உணவுத் திட்டம்

கொழும்பு, ஓக. 01

இலங்கையில் தற்போது கையிருப்பிலுள்ள பெற்றோல் சாதாரண தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட போதுமானதாக இல்லை என்று உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

டொலர் நெருக்கடியால் அரசாங்கம் 12 மாதங்களுக்கு எரிபொருள் இறக்குமதிமீது கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. எஞ்சியுள்ள பெற்றோல் கையிருப்பு சாதாரண தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக்கூட போதுமானதாக இல்லை.

இந்த நிலை பொது மக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதித்துள்ளது. குறிப்பாக, தொழிலுக்கு செல்வதற்கான மக்களின்

15

## இனப் பிரச்னை தீர்வுக்கு ரணிலுடன் பேசுவோம்!

### சிறீதரன் எம். பி. சொல்கிறார்

கிளிநொச்சி, ஓக. 01

இனப் பிரச்னையை தீர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசத் தயாராகவே நாங்கள் இருக்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவ

15



### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எரிபொருளை வழங்க ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஓக. 01

யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கிராம அலுவலர் பிரிவுகளை ஒதுக்கி, எரிபொருள் விநியோகிப்பதற்கான சாத்தியம் குறித்து மாவட்ட செயலர் க. மகேசன், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரனுடன் ஆராய்ந்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் வாகன இறுதி இலக்கங்கள் அடிப்படையில் அல்லாது ’கியூ. ஆர்’ குறியீடு முறைமையில் மாத்திரமே நாடு முழுவதும் எரிபொருள் விநி யோகம் இடம்பெறவுள்ளது.

அனைவருக்கும் எரிபொருள்

15

## இன்றுமுதல் கியூ. ஆர். முறை

கொழும்பு, ஓக. 01

தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரம் (கியூ. ஆர். குறியீடு) மூலமான எரிபொருள் விநியோகம் இன்று தொடக்கம் நாட்டில் முழுமையாக நடைமுறைக்கு வருகின்றது.

இதனால், இன்று முதல் வாகன இலக்கத்தின் இறுதி இலக்கம், எரிபொருள் அட்டை முறைமை மற்றும் ஏனைய முறைமைகள் மூலமான பெற்றோல் விநியோகம் எது

15

## இளைஞர் சுட்டும் வெட்டியும் கொலை!

### வவுனியாவில் பயங்கரம்

வவுனியா, ஓக. 01

இளைஞர் ஒருவர் கட்டுத்துவக்கால் சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா - ஆச்சிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், இதே இடத்தைச் சேர்ந்த ரஞ்சா என அழைக்கப்படும் ஜோன்சன் (வயது 30) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

அந்தப் பகுதிக்கு ஆயுதங்களுடன் வந்த குழு ஒன்று தாக்கியது என்றும், தொடர்ந்து அவரை

15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் குறித்து இந்தப் பத்தியில் முன்னரும் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றேன்.

அவர் அந்தக் கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவித்தது ஏன் என்பது பற்றி இதுவரை தெரியவரவில்லை. ஆனால், மலையக மக்களையும் தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும் என்ற தமது கோரிக்கையை ஒரு தேசிய ஆவணமாகத் தயாரித்து வைத்துள்ள அவர், அதனை அடைவதற்கான முயற்சியில்- அல்லது போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவதற்காகவே தான் பதவி விலகவிருக்கிறார் என்று அறிவித்திருக்கிறார்.

தமது அன்றாடக் கடமைகளைச் செய்வதற்கும் மற்றவர் துணை தேவைப்படுகின்ற நிலையிலும் தலைமைப் பதவியை இறுகப்பற்றிக் கொண்டிருக்கின்ற கலாசாரத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு, அவரின் இந்த அறிவிப்பு ஆச்சரியமானதுதான். ஆனால், அவரை அறிந்தவர்களுக்கு அது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இன்று இந்தப் பத்தியில் அவரைப்பற்றி எழுதுவதற்கு அவரின் இந்த அறிவிப்பு காரணமல்ல.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை "அறகலய" போராட்டக்காரர் என்றே எல்லோரும் அழைத்து வருகின்றனர். "அறகலய" என்பதன் தமிழ் அர்த்தம் போராட்டம் என்பதே. அதாவது போராட்டம் - என்பதற்கு சிங்களச் சொல்தான் அறகலய. ஆனால், அது என்ன என்பதை தெரிந்து கொள்ளாமலே, எங்களில் பலர் அறகலய போராட்டக்காரர்கள் என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

இவ்வாறு குறிப்பிடுகின்றபோது, பல சொற்கள் நமக்கு புரியாமலே நம்மத்தியில் புழக்கத்தில் இருப்பதை அவதானிக்கலாம். வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்காக புதிய கணக்குகளை ஆரம்பிக்கின்றபோதும், அதுபோலவே சிங்கள சொற்களை பயன்படுத்துவதும் அதனையே தமிழில் அப்படியே சிங்கள சொற்களின் பெயரையே தமிழில் எழுதுவதையும் கவனிக்கின்றபோது, இந்த ஊர்க்குருவிக்கு எரிச்சல் வருவதுண்டு. இதுவும் ஒருவகையில் மொழி அழிப்புத்தான்.

அதுபற்றி வேறு ஒரு நாளில் விரிவாகப் பார்ப்போம்.

இப்போது அந்த "அறகலய"காரர், சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றனர். முன்னர் கோட்டா கோ ஹோம் என்றவர்கள் ராஜபக்ஷக்கள் முற்றாக போனபின்னரும், பின்னர் ரணில் கோ ஹோம் என்று தொடங்கியபோது, அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்களோடு நின்றவர்களே இல்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள். இப்போதும் சிலர், தமது அரசியல் இலக்கை அடைவதற்காக அவ்வாறு கூறிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆனால், அப்படியில்லாமல், அந்த போராட்டக்காரர்கள் சிலர் வேறு சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றனர்.

ஆட்கடத்தல், முறை தவறிய கைது, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், அரசியல் கைதிகள் விடுதலை, மனித உரிமைகள் பேணல், மக்களுக்கு நிவாரணம் போன்ற சில முக்கிய கோரிக்களையும் அவர்கள் முன்வைத்திருக்கின்றனர்.

அநேகமாக இவை எல்லாமே ஏற்கனவே தமிழ் மக்கள் கோரி வருகின்ற விடயங்கள்தான். அண்மைக்காலமாக அந்தப் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுவருகின்றனர். அவர்களில் பலர் முறைகேடான வகையிலும், ஆட்கடத்தல் பாணியிலும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் செய்திகள் வந்தன. இந்தப் போராட்டங்களில் பங்குகொண்டதால் கைது செய்யப்பட்டவர்களையே அவர்கள் அரசியல் கைதிகள் என்று குறிப்பிடுவதாகத் தெரிகின்றது. நேற்றுக் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக கோரிக்கை வைக்கின்ற அவர்கள், பல ஆண்டுகளாக சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தையும் அதனோடே சேர்த்துக்கொள்ளாமல், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார் மனோ கணேசன்.

போராட்டக்காரர்களை சந்தித்து மனோ கணேசன், விடுத்திருக்கும் இந்தக் கோரிக்கை பற்றி குறிப்பிடுவதே இந்தப் பத்தியின் முக்கிய நோக்கம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிப்பதில் பத்து, பதினைந்து, இருபது வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது என்று அவர்களின் முகத்திற்கு நேரே தனக்கே உரிய பாணியில் சொல்லிவிட்டு வந்திருக்கிறார் அவர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும்வரை ஓயமாட்டோம் என்று ஒவ்வொரு நகரமாகச் சென்று கையெழுத்து வேட்டை நடத்திய தலைவர்கள் இருவரும், இந்தப் போராட்டக்காரர்களை பதில் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, ஒருநாள்கூட ஜனாதிபதியாகத் தொடரக்கூடாது என்று அவர்களை உசுப்பேத்திவிடும் அரசியலைச் செய்ய, மக்கள் தலைவர்கள் என்றால் எப்படியிருக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார் மனோ கணேசன்.!

- ஊர்க்குருவி.

## கிளிநொச்சியில் பெற்றோல் விநியோகம் இன்று பெறக்கூடியவர்களின் விவரம்!

கிளிநொச்சி, ஓக. 01

அத்தியாவசிய ஊழியர்களுக்கு முன்னுரிமைப்படுத்தி எரிபொருள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுட்டது.

கிளிநொச்சி கரைச்சி தெற்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குறித்த விநியோக நடவடிக்கை ஆரம்பமானது.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில், காலை 7மணி முதல் 9 மணி வரையில் விவசாயம் மற்றும் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் காலை 9மணி முதல் 10 மணிவரையில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பணியாளர்களுக்கும், காலை 10மணி முதல் 11 மணிவரையில் சுகாதார துறையினருக்கும், காலை 11மணி முதல் 12 மணிவரையில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் நண்பகல்12மணி முதல் 3 மணிவரையில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பிற்பகல் 3மணி முதல் 4 மணி வரையில் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 7 மணி வரையில் ஏனைய திணைக்களங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பணியாளர்களுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோல் விசாரிக்கச் சென்ற யுவதி டிப்பர் மோதி உயிரிழப்பு

அநுராதபுரம், ஓக. 01

அநுராதபுரம், பந்துலகம, எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக, நேற்று முன்தினம் யுவதி ஒருவர் டிப்பர் வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்தார். அவரின் மகள் படுகாயமடைந்துள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த 28 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்தார்.

பந்துலகம எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த தாயும், மகளும் எரிபொருள் உள்ளதா என அறிந்து மீண்டும் அவ்விடத்தை விட்டு வெளியேற முற்பட்ட போது பின்னால் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்று திடீரென முன்னோக்கி நகர்ந்து மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது.

இதில், தாயும் மகளும் கீழே விழுந்து டிப்பரின் முன் சக்கரத்தில் சிக்கி விபத்துக்குள்ளாகும் காட்சி அங்கிருந்த சி. சி. ரீ. வி கமெராவில் பதிவாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த தாயும், மகளும் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மகள் உயிரிழந்தார். தாய் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான டிப்பர் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அதனை, இயக்குவதற் காக மற்றுமொரு டிப்பர் வாகனத்தால் பின்னாலிருந்து தள்ளப்பட்ட நிலையில், டிப்பர் முன்னோக்கி சென்று மோட்டார் சைக்கிள் மீது மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## காலியில் ஒருவர் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஓக. 01

காலி - ரத்கமை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் 45 வயது நபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

காலி, ரத்கமை - கம்மெதே கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதோடு, மேலும் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

24 மணி நேரத்தில் நடந்த இரண்டாவது துப்பாக்கிச்சூடு சம்பவம் இதுவாகும்.

நேற்று முன்தினம் இரவு கொட்டாஞ்சேனையில் 51 வயது நபர் சுட்டுக்கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆசிரியர், சுகாதார ஊழியருக்கு எரிபொருள் நிலையம் ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஓக. 01

கிளிநொச்சியில் அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கு தனியாக எரிபொருள் நிரப்பு நிலையம் ஒதுக்கப்பட்டுட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பணியாளர்கள், ஆசிரியர்களுக்கே இவ்வாறு தனியாக எரிபொருள் நிரப்பு நிலையம் ஒதுக்கப்பட்டுள்ளது. கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையமே இவ்வாறு அத்தியாவசிய பணியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 40 புதிய பேருந்துகள் பாடசாலை சேவையில்!

கொழும்பு, ஓக. 01

பாடசாலை மாணவர்களுக்கான போக்குரத்து சேவையில் இன்று திங்கட்கிழமை முதல்

புதிதாக 40 பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

தற்போதுள்ள சேவையில் உள்ள "சிசு செரிய" பஸ்களுக்கு மேலதிகமாக இந்த பஸ்கள் சேவையில் சேர்க்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்தார்.

இதன்படி, புதிய சேவையின் கீழ், சாதாரண பஸ் கட்டணத்திற்கு உட்பட்டு மாணவர்களை ஏற்றிச் செல்லவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருக்கோவிலில் நேற்றுப் போராட்டம்!

திருக்கோவில், ஓக. 01

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பகுதியில் தமிழ் இனப்படுகொலையாளிகளை சர்வதேசம் உடன் கைது செய்ய வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவர் திருமதி செல்வராணி தலைமையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில், "சர்வதேசமே வீதியில் கண்ணீருடன் நாம், தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட இலங்கை, தமிழ் இனப்படு கொலையாளிகளான கோட்டாபயவையும் மகிந்தவையும் சர்வதேசமே கைது செய், வடக்கு - கிழக்கில் இராணுவ ஆட்சியை முற்றாக நிறுத்த வேண்டும்" என காணாமல் ஆக்கபட்டோருக்கு நீதி கோரி கோஷங்களையும் எழுப்பியுள்ளனர்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
01.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தன் நிலைப்பாடும் கூட்டமைப்பின் நிலைப்பாடும்?

சர்வகட்சி அரசாங்கத்துக்கு தாம் பூரண ஆதரவு வழங்கவுள்ளதாக, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். ஆனால், வவுனியாவில் இடம்பெற்ற கூட்டமொன்றில், அது உண்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்கவேண்டும். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவின் நிகழ்ச்சிநிரலை தொடர்ச்சியாக அமுல்படுத்தி வருவதாக, தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். ஆனால், சம்பந்தன் எந்தவோர் இடத்திலும், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்பில் விமர்சனங்களை வெளியிடவில்லை.

ஆனால், சுமந்திரனோ தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்ப்பதிலேயே ஆர்வமாக இருக்கின்றார். விடயங்களை ஆழமாக நோக்கினால், சுமந்திரனின் விமர்சனங்கள் எவையும் அரசியல் கொள்கை நிலைப்பட்டதாகவோ அல்லது தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டதாகவோ தெரியவில்லை. ஏனெனில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற (மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தவிர்ந்த) உறுப்பினர்கள் எவருமே ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் பொதுவெளியில் பேசவில்லை. அதேவேளை ரணில் எதிர்ப்பு அரசியலை அவர்கள் மேற்கொள்ளவுமில்லை. குறிப்பாக, தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாகூட, கூட்டமைப்பின் முடிவுகள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே சம்பந்தன், சர்வ கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்திருக்கின்றார். ஆனால், சம்பந்தன் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு என்னும் அடிப்படையிலேயே இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். ஆனால், தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான ஓர் உத்தியாகவே, சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பில் பரீசிலிக்கப்படுகின்றது. இந்த நிலையில் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை இலக்காகக் கொண்டு தேசிய அரசாங்கம் செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. ஆனால், அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களின் ஊடாக நன்மைகளைப் பெற முடிந்தால், அந்த விடயங்களில் கூட்டமைப்பு கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.


அதேவேளை, கூட்டமைப்பு தேசிய அரசாங்கத்துக்குக் கட்டாயம் என்றுமில்லை. ஏனெனில், ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், ரணில் விக்கிரமசிங்கவோடு மிகவும் நெருக்கமாக செயல்பட்டபோதுகூட, கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகித்திருக்கவில்லை. மேலும், கூட்டமைப்பை தேசிய அரசாங்கத்தில் உள்ளடக்குவதால் ரணில் விக்கிரமசிங்கவுக்கே அதிக நெருக்கடிகள் ஏற்படும். எனவே, கூட்டமைப்புக்கான அழைப்பு என்பது, சம்பிரதாயபூர்வமான அழைப்பாக இருப்பதற்கே வாய்ப்பு அதிகம்.

தேசிய அரசாங்கத்தில் இணைவதா அல்லது வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்னர், நாம் முன்னைய தலையங்கங்களில் சுட்டிக்காட்டியதைப் போன்று, முதலில் கூட்டமைப்புக்குள் தெளிவான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும். தெளிவானதோர் உடன்பாடு ஏற்பட வேண்டும். அந்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் தேவையற்ற வகையில், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுவெளிகளில் பேசுவதை நிறுத்த வேண்டும். ஏனெனில், தென்னிலங்கையோடு உரையாடுவதற்கு முன்னர், முதலில் தமிழர் தரப்புகள் மத்தியில் தெளிவான உடன்பாடு அவசியம். ஆளுக்கொரு நிலைப்பாட்டை முன்வைத்துக் கொண்டு, தேசிய இனப்பிரச்னை தொடர்பில் மட்டுமல்ல, தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்னை தொடர்பிலும் தென்னிலங்கையோடு உரையாட முடியாது.

சம்பந்தன் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாகக் கூறுகின்றபோது, மறுபுறும், கூட்டமைப்பின் பேச்சாளராக செயலாற்றுபவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவெளிகளில் விமர்சிக்கின்றார். அதேவேளை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மாறுபட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். சம்பந்தன் தற்போது அரசியல் செயல்திறனுடன் இல்லை. அவருக்கு வெளியில் இடம்பெறும் பல்வேறு விடயங்கள் பற்றி, போதிய தகவல்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. அண்மையில் இடம்பெற்ற சீனத் தூதரக இரகசிய சந்திப்பு தொடர்பில் சம்பந்தன் இதுவரையில் பேசவில்லை. இந்த நிலையில் கூட்டமைப்பின் நிலைப்பாடும் சம்பந்தனின் நிலைப்பாடுகளும் இப்போது ஒன்றாக இருக்கின்றனவா என்பதில் சந்தேகங்கள் உள்ளன. சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பில் சம்பந்தன் வெளிப்படுத்தியிருக்கும் அபிப்பிராயம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

# ‘நோ ஹோம் ரணில்’!

**அலசுவது இராஜதந்திரி**



இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஓரிரு தினங்களுக்கு முன்னர் தமக்கு இருப்பதற்கு வீடில்லை என்று கூறியதோடு “எவராவது “கோ ஹோம் கோட்டா” என்று கோஷமிட்டதுபோல “கோ ஹோம் ரணில்” என்று கோஷமிட்டால், எனக்கு இருப்பதற்கு வீடில்லை. எனக்கொரு வீட்டை கட்டித் தாருங்கள். நான் அங்கே போய் இருந்து விடுகிறேன்“ என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணிலின் இந்தக் கூற்று அவரை அனுதாபத்துக்குரியவராக பார்க்க வைத்துள்ளது. எத்தகைய பதவி , பட்டாளம், பாதுகாப்பு என்பவை இருந்தபோதிலும் அவரும் தற்போது வீடில்லாதவராக இருப்பதையும் தீ வைக்கப்பட்ட வீடு தமக்கிருந்த ஒரேயொரு பூர்வீக சொத்து எனக் குறிப்பிட்டதோடு அதனை தமக்குப் பின்னர் தாம் கல்வி பயின்ற கொழும்பு றோயல் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்குவதே தமது விருப்பம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால், “நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்று“ என்பதுபோல ரணிலின் விருப்பத்துக்கு மாறாகவே அவரின் பூர்வீக இல்லம் தீயிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லம் மட்டுமல்ல. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அம்பாந்தோட்டை மெதமுல்லையில் அமைந்துள்ள பிரத்தியேக இல்லமும் ஒரு மாதத்துக்கு முன்னர் தீ வைத்து கொளுத்தப்பட்டிருந்தது. இவை தவிர எழுபது பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருந்தன.

இவை பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களின் ஆவேசம், ஆத்திரம் என்பவற்றின் வெளிப்பாடாக இருக்கலாம். ஆனால், மறுபுறத்தே ஜனாதிபதி ரணிலுக்கும் ஏனைய அரசியல் பிரமுகர்களுக்கும் நடந்தவை போன்ற வன்முறைகள் நாட்டுக்கு புதிதான வையல்ல. இதுபோன்ற வன்முறைகளால் நாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு மக்களே என்பது குறிப் பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கை பூர்வீகமாகக்கொண்ட மக்கள் கொழும்பில் வாழ்ந்தபோது இனக் கலவரங்களினால் எவ்வாறு தமது சொத்து சுகங்களை இழந்து பரிதவித்து நின்றனர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் மட்டுமல்ல. இனக்கலகங்கள் வெடித்த காலத்தில் இராணுவத்தில் பணியாற்றிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நன்கறிந்து வைத்திருப்பார் என்றே அறிய முடியும்.

ஆனால், மஹிந்த, ரணில் , கோட்டாபய ஆகியோர் தற்போது பரிதாபத்துக்குரிய நிலையில் இருப்பதை நோக்கும்போது அவர்கள் மீது அனுதாபம் கொள்வது

ஒருபுறமிருக்க நாட்டில் வன்முறைக் கலாசாரம் எவ்வளவு தூரம் ஆழவேரூன்றியுள்ளது என்பதை அண்மைக்கால வன்முறைகளில் பாதிப்புற்ற அனைத்து அரசியல் பிரமுகர்களுமே நன்கறிந்திருப்பார்கள் என்பதையே அனுமானிக்க கூடியதாக இருக்கின்றது.

அப்பாவி சாதாரண மக்கள் விரட்டியடிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்ட காலம் மாறிப்போய் தற்போது பலம் வாய்ந்த முக்கிய அரசியல் புள்ளிகளையே நிர்க்கதி யாக்கி, புரட்டி எடுத்துப்போடுமளவுக்கு சட்டம், ஒழுங்கு என்பவை கேலிக்கூத் தாகியுள்ளதையே அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

இத்தகைய பின்னணியில் நாட்டின் அரசியல், பொருளாதார பிரச்னைகள் ஒருபுறமிருக்க சட்டம் ஒழுங்கு என்பவை மோசமாக சீர்குலைந்துள்ளதையே தெளிவாக அறிய முடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு இருப்பதற்கு வீடு இல்லை என்று அங்கலாய்த்துப் போயுள்ளார். ஆனால், நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் ஆயுதப் போராட்டங்களின் ஆரம்ப காலத்தில் ஆயுதப் போராளிகளின் மறைவிடங்களாக இருந்தவை என்று சந்தேகிக்கப்பட்ட உறுதியான வீடுகள் பல இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. யாழ். குடாநாட்டில் விமானக் குண்டுவீச்சுகள் ஆரம்பமாகும் முன்னரே போராளிகளின் மறைவிடங்கள் என்று கருதப்பட்ட வீடுகள் ஆயுதப்படையினரால் தகர்க்கப்பட்டிருந்தன.

அன்று இலங்கையின் ஆயுதப் படையினருக்கு இஸ்ரேலிய இராணுவமும் பயிற்சியளித்திருந்தது. எனவே, இஸ்ரேல் படையினர் தமக்கெதிரான பலஸ்தீன , லெபனான் தீவிரவாதிகளின் மறைவிடங்களை தேடிச்சென்று தகர்த்திருந்தனர்.


அத்தகைய பாணியிலேயே யாழ்ப்பாண குடாநாட்டிலும் சந்தேகத்துக்கிடமானவை என்று கருதப்பட்ட பல வீடுகள் ஆயதப்படையினரால் தகர்த்தெறியப்பட்டிருந்தன.

இதேவேளை யுத்தம் முடிவுற்று பத்தாண்டுகளுக்கும் மேலாகியுள்ள நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையானதுகூட கவலைக்குரியதே.

தமக்கு “நோ ஹோம்” அதாவது இருப்பதற்கு வீடு இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

அவரைப் போல ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல்களை மட்டும் இழக்கவில்லை. உற்றார்,உறவினர்களையும் இழந்து இன்று வரை வடக்கு - கிழக்கில் பரிதவித்து நிற்கின்றனர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இத்தருணத்திலாவது உணர வேண்டியவராகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# சீன உளவு கப்பல் இலங்கைக்குள் நுழையாமல் தடுத்து நிறுத்துங்கள்

## இந்திய அரசிடம் பா. ம. க. கோரிக்கை

சென்னை, ஓக. 01

சீன உளவுக் கப்பலின் வருகையால் இந்தியாவுக்கு ஆபத்து உள்ளது. எனவே, அது இலங்கைக்குள் நுழையாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா. ம. க.) நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

"சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங்-5 என்ற சக்திவாய்ந்த உளவுக்கப்பல் வரும் ஓகஸ்ட் 11-ஆம் திகதி இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்து, ஒரு வாரத்திற்கு நிலை நிறுத்தப்பட்டு இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சீன உளவுக் கப்பலின் வருகை, இந்தியாவின், குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும்.

சீனாவின் ஜியாங்யின் துறைமுகத்திலிருந்து கடந்த 13ஆம் திகதி புறப்பட்ட யுவான் வாங் கப்பல் தாய்வானைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் பயணித்துக் கொண்டிருக்கிறது. ஓகஸ்ட் 11ஆம் திகதி அந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடையும் என்ற தகவல் ஏற்கெனவே வெளியானது.

அப்போதே அது குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தது. அப்போது அதை திட்டவட்டமாக மறுத்த இலங்கை அரசு, இப்போது உளவுக்கப்பலின் வருகையை உறுதி செய்திருக்கிறது. இலங்கை அரசின் இந்த தடுமாற்றத்திலிருந்தே சீனக் கப்பலின் வருகை இந்தியாவுக்கு ஆபத்தானது என்பதை உணரலாம்.

சீன உளவுக்கப்பல் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். 750 கி.மீக்கும் அதிக சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக்கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் சீனக் கப்பலுக்கு உண்டு. அதாவது கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் யுவான் வாங் கப்பல் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும்.

அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீன கப்பலின் இலங்கை வருகை தென்னிந்தியாவுக்கு எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவை உளவு பார்க்க சீனா துடிப்பதும், அதற்கு இலங்கை உதவுவதும் இது முதன் முறையல்ல. கடந்த 2014 ஒக்ரோபர் 31ஆம் திகதி சீனாவின் சாங்ஷெங் -2 நீர்மூழ்கிக் கப்பலும், சாங் ஜிங் தாவ் போக்கப்பலும் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து 5 நாட்கள் இந்திய நிலைகளை உளவு பார்க்க முயன்றன.

இலங்கைக்கு கொடுத்த கடனை காரணம் காட்டி அம்பாந்தோட்டை துறைமுகத்தையும், அதைச் சுற்றியுள்ள 15,000 ஏக்கர் நிலங்களையும் வளைத்து விட்ட சீனா, அங்கிருந்தும் இந்தியாவை உளவு பார்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறது.

சீன உளவுக் கப்பலின் வருகையை தொடக்கத்தில் மறைத்த இலங்கை அரசு, பின்னர் உண்மை அம்பலமான பிறகு தான் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான சீனச் சதிகளுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் அப்பட்டமாக துணைபோகின்றனர் என்பதற்கு இது தான் சிறந்த உதாரணம்.

சீனக் கப்பலின் இலங்கை வருகை என்பது ஐக்கிய நாடுகள் கடல் சட்ட உடன்படிக்கையை மீறிய செயல் ஆகும். சீனக் கப்பலை இலங்கை அனுமதிப்பது 1987ஆம் ஆண்டு இந்திய, இலங்கை அமைதி உடன்பாட்டிற்கு எதிரான செயலாகும்.

அந்த உடன்பாட்டின்படி இலங்கை மண்ணை இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு எதிரான செயல்களுக்கு பயன்படுத்தக்கூடாது. சீனக் கப்பலை அனுமதிப்பது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால் அதை இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இலங்கை இந்தியாவிடமிருந்து கச்சதீவு உள்ளிட்ட ஏராளமான உதவிகளைப் பெற்றுக் கொண்டாலும் கூட, ஒருநாளும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்ததில்லை. இப்போதும்கூட, கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் இலங்கைக்கு கடந்த சில மாதங்களில் மட்டும் ரூ.32,000 கோடி உதவி வழங்கியுள்ளது.

இவ்வளவுக்குப் பிறகும், இந்தியாவுக்கு எதிராக, சீனாவுக்கு சாதகமாக செயல்படும் இலங்கையை இனியும் நம்ப வேண்டுமா? என்பது குறித்து இந்தியா முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது.

சீனக் கப்பலை இலங்கை அனுமதித்தால், இந்தியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எத்தகைய கடினமான நடவடிக்கையையும் எடுப்பதற்கு மத்திய அரசு தயங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்." என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# தேர் குடை சாய்ந்து விபத்து; புதுக்கோட்டையில் ஐவர் காயம்!

புதுக்கோட்டை, ஓக. 01

புதுக்கோட்டையில் பிரகதாம்பாள் கோயில் நேற்று நடைபெற்ற தேரோட்டத்தின்போது தேர் சாய்ந்து விபத்துக்குள்ளானதில் பக்தர்கள் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

புதுக்கோட்டை திருக்கோகர்ணத்தில் மிகவும் பழமையான பிரகதாம்பாள் உடனுறை கோகர்ணேஸ்வரர் கோயில் உள்ளது. மிகவும் பழமையான, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள இக்கோயிலானது கி.பி 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கூறப்படுகிறது.

இக்கோயிலில் ஆடிப்பூர திருவிழா கடந்த வாரம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து, அம்மன் வீதியுலா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்று வந்த நிலையில், முக்கிய திருவிழாவான தேரோட்டத் திருவிழாவை முன்னிட்டு நேற்று அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் தேரில் எழுந்தருளினார்.

தேரின் முன்னும், பின்னும் சப்பைரதங்களில் விநாயகர், முருகன், சண்டிகேஸ்வரர் சுவாமிகளும் எழுந்தருளினர். இதன்பிறகு பக்தர்கள் தேரின் வடத்தைப் பிடித்து இழுத்தனர்.

கோயிலை சுற்றி தேரோடும் வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் வலம்வர வேண்டிய நிலையில், தேரிழுக்கத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே பிரகதாம்பாள் வீற்றிருந்த தேர் முன்புறமாக



சாய்ந்தது.

திடீரென தேர் சாய்ந்ததில் பக்தர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயினர். உடனடியாக, மாவட்ட தீயணைப்பு அலுவலர் பானுப்பிரியா தலைமையிலான தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், பக்தர்கள்மீது சாய்ந்திருந்த தேரைப் பிரித்து அகற்றி இடிபாடுகளுக்குள் சிக்கிய பக்தர்கள் 5 பேரை உடனடியாக மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலும் அம்மன் சிலையானது சேதமின்றி மீட்கப்பட்டு கோயிலுக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து சிறப்பு பூசைகள் இடம்பெற்றன. (ஐ)

ஓகஸ்ட் - 01 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 16
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ வழிபாடு நன்மை தரும். மனதில் நினைத்ததை செயல்படுத்தி மகிழ்ச்சி காண்பீர்கள். எண்ணம் நிறைவேறும். குடும்ப நலன் மேம்படும்.

**இடபம்**
நீண்ட நாளாக தள்ளி வைத்த வேலையில் இன்று கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தினருடன் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
நேற்று மேற்கொண்ட ஒரு முயற்சி இன்று நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். சகோதரர்கள் வழியில் நன்மை உண்டு. உங்கள் முயற்சி நிறைவேறும். லாபமான நாள்.

**கடகம்**
குடும்ப பிரச்னைகளுக்கு பேசி தீர்வு காண்பீர்கள். நன்மை அதிகரிக்கும். தம்பதிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவீர்கள். புதிய நபர்கள் அறிமுகம் ஆவார்கள்.

**சிம்மம்**
உங்கள் தொழில் ரகசியங்களை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளில் ஈடுபடுவீர்கள். வேலை பளு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் வெளியூர் பயணம் செல்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்திற்காக செலவு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். யோசித்து செயல்பட்டாலும் திடீர் செலவுகள் ஏற்படும். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள செலவு செய்வீர்கள்.

**துலாம்**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராமல் இருந்த ஒரு தொகை இன்று உங்கள் கைக்கு வந்து சேரும். உங்கள் தேவை பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
முயற்சி நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தடைபட்ட வருவாய் வந்து சேரும்.

**தனுசு**
குடும்பத்திற்குள் உண்டான குழப்பம் விலகும். தந்தையின் ஆலோசனை நன்மை தரும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் என்பதால் அமைதி காப்பது நல்லது. முயற்சிகள் இழுபறியாகும். மற்றவர் பிரச்னைகளில் தலையிட வேண்டாம். அதனால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். வேலைகளில் குழப்பம் உண்டாகும்.

**கும்பம்**
திறமை வெளிப்படும் நாள். உங்களைத் தேடி முக்கிய பொறுப்பு வரும். உங்கள் பலத்தை நீங்கள் அறிவீர்கள். தம்பதிக்குள் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும்.

**மீனம்**
எதிர்பார்த்த உதவி கிடைத்து மகிழ்வீர்கள். குடும்ப நிலை உயரும். விலகிச் சென்ற உறவினர் தேடி வருவார்கள். தடைகள் விலகும். சொத்து சம்பந்தமான பிரச்னையைத் தீர்ப்பீர்கள். உங்கள் முயற்சி ஆதாயமாகும்.

# ரணிலின் சர்வகட்சி அரசை கூட்டமைப்பு வரவேற்கும்!

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, ஓக. 01

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி ஆட்சியை அமைக்க விரும்பினால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாடு மீண்டெழசர்வகட்சி ஆட்சிதான் ஒரே வழி. ஆனால், அது உண்மைத்தன்மையான சர்வகட்சிஆட்சியாக இருக்க வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதிக்கத்தில் இருக்கின்ற சர்வகட்சியாக அது இருக்கக்கூடாது.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே இதனைத்தெரிவித்தார்.

“சர்வகட்சி அரசில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதம் எனக்கும் கிடைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டு வர வேண்டுமாக இருந்தால்குறுகிய காலத்துக்காவது சர்வகட்சி ஆட்சி அமைய வேண்டும். இல்லையெனில் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண முடியாது.

அப்படியொரு சர்வகட்சி ஆட்சி வேண்டும் என்பதற்காகத் தான்பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவின்போது டலஸ் அழகப்பெருமவுக்கு நாம் ஆதரவு கொடுத்தோம். எதிர்க்கட்சியில் அமைந்துள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள சிலரும் இணைந்து ஆட்சி அமைத்தால்தான் அது சர்வகட்சியாக இருக்க முடியும். இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தவர்கள் முழுக்க முழுக்க சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள். அவர்கள் ஒன்றாகச் செயல்பட்டமையால் சர்வ கட்சி ஆட்சியை அமைக்க முடியாமல்போனது.

ஆனால், தற்போது ஜனாதிபதியாக வந்த பின் ரணில் விக்கிரமசிங்க ஒருசர்வகட்சி ஆட்சியை அமைக்க விரும்பினால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாடு விடுபட அதுதான் ஒரே வழி. ஆனால், அது உண்மைதன்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதிக்கத்தில் இருக்கின்ற சர்வகட்சியாக அது இருக்கக்கூடாது. ஏனெனில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன, மக்கள் ஆணையை இழந்த கட்சி. அதனாலேயே அந்தக் கட்சியின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகியிருந்தார்கள்” - என்றார்.

(ஐ)



# 1081 எரிவாயு சிலிண்டர்கள் வவுனியாவில் விநியோகம்!

வவுனியா, ஓக. 01

வவுனியா ஊடக அமையம் மற்றும் உக்குளாங்குளம் சீர்திருத்தம் விளையாட்டு கழகம் என்பன இணைந்து 1081 லிற்றோ சமையல் எரிவாயுக்களை எந்தவிதகுழப்ப முமின்றி அமைதியான முறையில் மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளன.

உக்குளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள சீர்திருத்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் வைத்து அவை நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

எந்தவித மேலதிக கட்டணங்களுமின்றி 12.5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 5,169 ரூபாய் படி 1011 உம், 5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 2,127 படி 50 உம், 2.3 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 1,044 படி 20 உம் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியாவின் பல்வேறு கிராமப் பகுதிகளிலும் இருந்து வருகை தந்த மக்கள் இவற்றைப் பெற்றுச் சென்றனர். மக்கள் நீண்ட நேர காத்திருப்பு, நீண்ட வரிசை, நேரவிரயம், அலைச்சல், மேலதிக கட்டணம் என எதுவுமின்றி அதனை இலகுவாக பெற்றுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொட்டாஞ்சேனையில் தமிழர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஓக. 01

கொழும்பு - கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் நேற்று முன்தினம் இரவு 51 வயதுடைய நபர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் தமிழர் என்றும், அவர் வட்டிக்கு பணம்கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் அறிய வருகின்றது.

கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகள் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கரையோர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# குருநகர் தேவாலயத்தில் ஆராதனை நடைபெற்றபோது மின்னல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக. 01

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிறு ஆராதனை இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, தேவாலயத்தை மின்னல் தாக்கியது.

குருநகர், புனித ஆரோக்கிய நாதர் தேவாலயத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் மழைவீழ்ச்சி பதிவானது. புனித ஆரோக்கியநாதர் தேவாலயத்தில் ஞாயிறு ஆராதனை நடந்து கொண்டிருந்த போது, தேவாலயத்தை மின்னல் தாக்கியது.

இதனால் தேவாலயத்தின் மேற்கூரைப் பகுதிகளும், மின் இணைப்புக்களும் சேதமடைந்தன. எனினும், யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ஐ)

# அரசாங்கம் நிதானமாக செயல்படுவது அவசியம்!

## இராகிருஷ்ணன் எம். பி.

நுவரெலியா, ஓக. 01

சீனாவின் உளவுத்துறை கப்பல் இலங்கை வருவது தொடர்பாக அரசாங்கம் அவதானமாக செயல்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலை வரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், இலங்கை பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. குறிப்பாக அத்தியவசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம், எரிபொருட்களின் விலையேற்றம் தட்டுப்பாடு என்பன முக்கிய விடயங்களாக மாறியிருக்கின்றன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் இலங்கைக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சீனாவின் உளவு கப்பல் ஒரு வாரத்திற்கு இலங்கைக்கு வரவுள்ளதான செய்திகள் வெளியாகியுள்ளன. இது இன்றைய சூழ்நிலையில் எந்தளவு பொருத்தமாக அமையும். குறிப்பாக இந்தியாவின்

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமா? இதனை இந்தியா உட்பட ஏனைய நாடுகள் எவ்வாறான கண்ணோட்டத்துடன் பார்க்கும். குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் இந்தியாவுடன் நெருக்கமாக செயல்பட்டு வருகின்றது.

அவை, இது இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தலாக அமையுமா, அல்லது இந்திய பாதுகாப்புக்கு கேள்விக்குறியாக அமையுமா? என்பதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை. ஏனெனில் இந்தியா - சீனா இடையே பல்வேறு முரண்பாடுகள் இருக்கின்ற சூழ்நிலையில் இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகின்றது.

இன்றைய சூழ்நிலையில் இந்திய அரசாங்கத்தின் உதவிகள் இலங்கைக்கு கிடைப்பது தடைப்படுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவுகளை சந்திக்க நேரிடும். இந்திய அரசாங்கம் தற்போது இலங்கைக்கு தொடர்ச்சியாக செய்து வருகின்ற உதவிகள் கேள்விக்குறியாகுமா? எனவே இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் மிகவும் நிதானமாக கையாள வேண்டும்.

சீன கப்பல் எங்களுக்கு தேவையான அத்தியவசிய பொருட்களையோ, மருந்து பொருட்களையோ கொண்டு வருமாக இருந்தால் அதில் எவ்வித பிரச்னையும் ஏற்பட

போவதில்லை. மாறாக உளவு பார்க்கும் விடயத்திற்காக இலங்கை வருவது பலருக்கும் பல சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் நிதானமாக கையாளவிட்டால் பல்வேறு சிக்கல்களுக்கு எதிர்காலத்தில் நாம் முகங் கொடுக்க வேண்டிவரும் - என்றுள்ளது.

# உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை!

கிளிநொச்சி, ஓக. 01

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாக சீர்கேடுகளை சீர் செய்ய இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமரின் தலைமையில் குழு ஒன்று கிளிநொச்சி வருகை தந்தனர்.

குறித்த குழு நேற்றுமுன்தினம் பி.ப 2 மணிக்கு கிளிநொச்சிக்கு வருகை தந்து கிளிநொச்சி லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களை சந்தித்தனர்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைத்து உடனடியாக யாப்பு ஒன்றைத் தயாரித்து உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அதன் பின்னரே நிரந்தர நிர்வாகம் அமைக்கப்படும் எனவும் தங்கள் அனுமதி இன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் எவருக்கும் காற்பந்து லீக் தொடர்பான கூட்டங்கள் வைக்க அனுமதி இல்லை என்பதுடன் அவ்வாறான கூட்டங்களுக்கு செல்லும் கழகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# விதிகளை மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை பாயும்

## இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 01

**நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அதன் சுமையை பொருளாதாரக் கட்டமைப்பு சார்ந்த அனைத்துத்தரப்பினரும் சமஅளவில் தாங்கிக் கொள்ளவேண்டும். நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி நாமனைவரும் முன்நோக்கிப் பயணிப்பதை இலக்காகக்கொண்டு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் தொடர்பான வழிகாட்டல்கள், ஏற்றுமதி மட்டுப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதுடன் அவை உரியவாறு பின்பற் றப்படுகின்றதா வென உறுதிப் படுத்தப்படும். விதிகளை மீறி செயல்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்டத்தின் பிரகாரம் மிகவும் வலுவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்திருக்கின்றது.**

இதுகுறித்து மத்திய வங்கி வெளியிடப்பட்டிருக்கும் அறிக் கையில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது,

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டு மக்கள்மீது ஏற்பட்டிருக்கும் தாக்கத்தைக் குறைப் பதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் ஒன்றிணைந்து பல் வேறு நடவடிக்கைகளை முன் னெடுத் துவருகின்றது. தற்போதைய நெருக்கடிக்கும், அது மேலும் தீவிரமடைவதற் கும் நாட்டின் வங்கிக்கட்டமைப்பில் திர வத்தன்மை கூடிய வெளிநாட் டுக்கையிருப்பின் அளவு மிகவும் குறை வான மட்டத்தில் காணப் படுகின்றமையே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது. வெளிநாட்டுக்கையிருப்பு வீழ்ச்சியானது எரிபொருள் உள்ளடங்கலாக அத்தியா வசியப்பொருட்களின் இறக்குமதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் வங்கிக்கட்டமைப்பிடம் போதியளவிலான வெளிநாட்டுக் கையிருப்பு காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கியானது ஏற்றுமதிகள் மூலமான வருமானத்திற்கு சில மட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலையிலிருக் கின்றது. குறிப்பாக ஏற்கனவே மத்திய வங்கியினால் ஏற்றுமதிகள், அதற்கான கொடுப் பனவு செலுத்துகைக் காலம் என்பன தொடர்பில் மட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டு நாணய

வெளிப்பாய்ச்சலைக் கட் டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் முறை சாரா வழிமுறைகளை விடுத்து, உரிமம்பெற்ற வங்கிகளின் ஊடாக வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதற் கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

இருப்பினும் இந்த வழி காட் டல் மற்றும் மட்டுப் பாட்டு நடவடிக்கைகளின் வெற்றி என் பது வர்த்தக சமூகம் மற்றும் வங்கிக்கட் டமைப்பு ஆகியவற் றின்ஆதரவு மற்றும் ஒத்து ழைப்பு என்பவற்றிலேயே தங் கியிருக்கின்றது.

எதுஎவ்வாறெனினும் சந் தையின் சில தரப்பினர் இந்த வழிகாட்டல்களுக்கு அமை வாகச் செயற்படவில்லை என்ற விடயம் மத்திய வங்கியின் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டிருக்கின்றது. மிகவும் கடினமானதொரு காலப் பகுதியில் அனைத்துத்தரப் பினரும் சமஅளவில் சுமையைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்றுஎதிர் பார்க்கப்படுகின்றது.

இதன்படி நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி நாமனை வரும் முன்நோக்கிப் பயணிப் பதற்கு வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் தொடர்பான வழி காட்டல்கள், ஏற்று மதிமட்டுப் பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உன்னிப்பாகக் கண்காணிக் கப்படுவதுடன் அவை உரி யவாறு பின்பற்றப் படுகின் றதாவென உறுதிப் படுத்தப்படும் என்பதை பொரு ளாதாரத்துடன் தொடர்பு டைய அனைத்துத் தரப்பின ருக்கும் மீளவலியுறுத்துவதற்கு மத்திய வங்கி விரும்புகின்றது.

இதனைமீறி செயற்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்டத்தின் பிரகாரம் மிகவும் வலுவான நடவடிக்கை எடுக் கப்படும்.

இதேவேளை பொருளாதார உதவித்திட்டமொன்றைப் பெற றுக்கொள்ளும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத் துடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுகள் ஓரளவிற்குமுன் னேற்றத்தைக் காண்பிப்பதுடன் தகுதிவாய்ந்த சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களின் உதவியுடன் கடன்மறுசீரமைப்பு தொடர் பான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எரிபொருள் தட்டுப்பாடு; நெல் அறுவடை பாதிப்பு!

சம்மாந்துறை, ஓக. 01

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் தற்போது சிறு போக வேளாண்மை அறு வடை காலம் ஆரம்பித்துள் ளது. இந்நிலையில்,உழவு இயந்திரங்கள் மற்றும் அறு வடை இயந்திரங்களுக்கு எரிபொருளைப் (டீசல்) பெற முடியா துள்ளதாக விவசாயி கள் கவலை தெரிவித்தனர்.

இதனால், சம்மாந்துறை மற்றும் மல்வத்தை கமநல சேவைகள் மத்திய நிலையத் துக்குட்பட்ட பிரதேசங்களில் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் நெல்லை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட செய லாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் அறிவுறுத்தலுக்கமைய, விவ சாயிகளுக்கு கமநல சேவைகள் மத்திய நிலையங்களில் ஊடாக ஏக்கர் ஒன்றுக்கு 15 லீற்றர் வீதம் எரிபொருள் (டீசல்) பங் கீட்டு அட்டை மூலம் விவசா யிகளுக்கு எரிபொருள் விநியோ கிக்கப் பட்டுள்ளன. டீசல் கிரமமான முறையில் வழங்கு வதற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

சம்மாந்துறையில் நான்கு எரிபொருள் நிலையங்களிலும் உழவு இயந்திரம் மற்றும் கலன் களின் மூலம் டீசலை பெற்றுக் கொள்வதற்காக விவசாயிகள் நீண்ட நாட்களாக வரிசையில் காத்திருக்கின்ற போதிலும் டீசலை பெற்றுக் கொள்ள முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

எரிபொருளுக்கு தட்டுப் பாடு நிலவி வருகின்ற போதி லும் வேளாண்மை அறுவடை செய்வதற்கு எவ்விதப் பாதிப் பும் ஏற்படாத வகையில் விவ சாயிகளுக்கு முன்னுரிமை அடிப் படையில் எரிபொருளை வழங் குவதற்கான பொறி முறையை அதிகாரிகளும், எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தின ரும் முன்னெடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். (ஐ)

# விவகரத்து கோரிய மனைவியை கடத்திச் சென்ற கணவர் கைது!

மட்டக்களப்பு, ஓக. 01

விவாகரத்துகோரிய மனை வியை ஓட்டோவில் கடத்திச் சென்ற கணவரும் அவரின் பெற்றோருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் நேற்று முன் தினம் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது, அவர்களை விளக் கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு - ஜெயந்திபு ரம் பிரசேத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து மேலும் அறிய வருவ தாவது, தம்பதியரான இருவ ருக்கும் 6 மாதங்களுக்கு முன் னர் திருமணம் இடம்பெற்றது.

இந்நிலையில், இருவரும் 3 மாதங்களுக்கு முன்னர் கருத்து வேறுபாட்டால் பிரிந்தனர். இதனால், மனைவி பெற்றோ ரின் வீட்டுக்கு சென்றுள்ளார். அத்துடன், விவாகரத்து கேட்டு நீதிமன்றில் வழக்கு தொடுத்தி ருந்தார்.

இந்நிலையில், கடந்த வெள் ளிக்கிழமை கணவரும் அவரின் பெற்றோரும் ஓட்டோவில் மனைவியின் வீட்டுக்கு சென் றுள்ளனர். அங்கு, மனைவியின் தாயாரையும்,

சகோதரிகளையும் தாக்கி விட்டு மனைவியை வலுக்கட் டாயமாக ஓட்டோவில் ஏற்றிச் சென்று தனது வீட்டில் அடைத்து வைத்துள்ளார்.

இந்த சம்பவத்தில் பெண் ணின் தாயார் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அவர், அளித்த முறைப்பாட்டின் அடிப்படை யில் பொலிஸார் கடத்தப்பட்ட பெண்ணை மீட்டனர். அத்து டன், மூவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். (ஐ)

# இலங்கையின் நெருக்கடி நிலைமையை இந்தியா, அமெரிக்கா சாதகமாக்குகின்றன

## திஸ்ஸ விதாரண எம். பி.

கொழும்பு, ஓக. 01

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயல்படுத்தினால் பொருளா தார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்வார் கள். இலங்கையின் பொருளா தார நெருக்கடியை இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடு கள் தங்களின் அதிகார போட் டிக்காக பயன்படுத்திக் கொள் வதை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரி யர் திஸ்ஸ விதாரண தெரிவித் தார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில், சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அர சியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்படும் சர்வகட்சி அரசாங்கத்தின் வியூகம் தொடர் பில் வெளிப்படை தன்மை யிலான பேச்சுகளை முன்னெ டுப்பது அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத் தின் ஒத்துழைப்பை பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடி யும் என ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. நாணய நிதி யத்தின் நிபந்தனைகளை முழு மையாக செயல்படுத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக் கபபட்டுள்ள நடுத்தர மக்கள் மேலும் மிக மோசமான நிலைக்கு கொண்டு செல்லும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இந்தியா,சீனா மற்றும் அமெரிக்காக ஆகிய நாடுகள் தங்களின் அதிகார போட் டிக்காக பயன்படுத்திக் கொள் வதை அவதானிக்க முடிகிறது.

அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் சீனா தொடர்பில் இலங்கையில் தவறான கருத் துக்களை குறிப்பிடுகின்றன. பொருளாதார நெருக் கடியை எதிர்கொண்டுள்ள பின்னணி யில் அமெரிக்கா குறிப்பிட் டதை போன்று இலங்கைக்கு உதவிபுரியவில்லை. ஒத்து ழைப்புக்கான நிபந்த னைகளை மாத்திரம் தொடர்ந்து விதித்து வருவதை அவதானிக்க முடிகி றது. ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயல் படுவார் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும் - என்றார். (ஐ)

# முகக்கவசம் அணியாதோருக்கு எரிபொருள் வழங்குவதில்லை!

## விநியோகஸ்தர் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஓக. 01

மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், முகக்கவசம் அணியாதவர்களுக்கு எரிபொருள் வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலை யங்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருவ தால், எரிபொருள் நிலையங்களுக்கு வருபவர்களுக்கு சுகாதார வழிகாட்டல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## யுவான் வாங் கப்பல் விவகாரம்:

# சுமுகத் தீர்வை எட்டுவதற்காக சீனா, இந்தியாவுடன் அரசு பேச்சு

கொழும்பு, ஓக. 01

**அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீனாவின் கப்பல் வர அனுமதிப்பது தொடர்பில் சுமுகத் தீர்வை காண்பதற்கு இலங்கை அரசாங்கம் சீனாவுடனும் இந்தியாவுடனும் பேச்சுக்களை நடத்துகிறது.**

சீனாவின் யுவான் வாங் 5 கப்பல் தொடர்பிலேயே இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்பதற்கு முன்னரே குறிப்பிட கப்பல் இலங்கைக்கு வருகை தருவதற்கு வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் மற்றும் துறைமுகங்கள் அதிகார சபையும் அனுமதி வழங்கின என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கப்பல் எதிர்வரும் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரவுள்ளது. எனினும் இந்தியா இந்த நடவடிக்கை குறித்து அதிருப்தியடைந்துள்ளது இது குறித்த பேச்சுகள் இடம்பெறுகின்றன என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கை குறித்தும் இந்தியா உன்னிப்பாக அவதானித்து என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதனை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்துள்ளது. இதுவே தெளிவான செய்தி எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு அதிகளவு கடனையும் ஒத்துழைப்பையும் வழங்கிய சீனா இந்தியாவுடன் இலங்கை கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்த விவகாரத்துக்கு தீர்வை காணவேண்டிய நிலையில் இலங்கை உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# சீன கப்பல் தரித்து நிற்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி!

கொழும்பு, ஓக. 01

சீனாவின் விண்வெளி ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளும் யுவான் வாங் 5 கப்பல் இலங்கையின் கடற்பரப்பில் 5 நாட்கள் மாத்திரம் நங்கூரமிட அனுமதி வழங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் தொடர்பாக கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவுள்ள குறித்த கப்பல் அவசியமான வசதிகளைப் பெற்ற பின்னர் இந்து சமுத்திரத்தின் வடமேல் கடற்பரப்பில் சுமார் ஒரு வார காலம் நங்கூரமிடப்பட்டு விண்வெளி மற்றும் செய்மதி கட்டுப்பாடு மற்றும் ஏனைய ஆய்வுகள் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

யுவான் வாங் 5 கப்பல் கடந்த ஜூலை 13ஆம் திகதி சீனாவின் பியேன் துறைமுகத்திலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின் கட்டணப் பட்டியலை மின்னஞ்சலில் பெறலாம்!

கொழும்பு, ஓக. 01

நாட்டில் மின் பாவனையாளர்கள் தங்களின் மாதாந்த மின் கட்டணத்தை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதற்காக தமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறும் மின்சார சபை நுகர்வோரைக் கேட்டுள்ளது.

மேலும், குறித்த மின்பட்டியலை பெறும் சேவைக்காக தமது வாடிக்கையாளர்களை குறுஞ்செய்தி ஊடாகவும் பதிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபை ஏற்பாடு செய்வதாக தெரிவிக்கிறது.

இதன்படி, இலங்கை மின்சார சபை தனது வாடிக்கையாளர்களை "E BILL" ஈ இடைவெளி, கணக்கு இலக்கம் ஈ இடைவெளி, மின்னஞ்சல் முகவரியை உள்ளீடு செய்து,1989 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பி பதிவுசெய்து கொள்ளுமாறும் கோரியுள்ளது. (ஐ)

# பொதுப் போக்குவரத்தில் களவு; மக்களே அவதானமாக இருங்கள்!

கொழும்பு, ஓக. 01

எரிபொருள் நெருக்கடிகளால் தற்போது பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்தும் மக்கள் பயணப் பொதிகள் மற்றும் உடைமைகள் களவு உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பொது போக்குவரத்து சேவைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. குறிப்பாக தனியார் பேருந்து சேவைகள், அரச பேருந்துகள் மற்றும் ரயில்கள் என்பவற்றை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன், அவற்றில் மக்களின் நெரிசலும் அதிகரித்துள்ளது.

இதன்போது மக்களின் பயணப் பைகள் மற்றும் ஏனைய பெறுமதிமிக்க பொருட்களை களவாடுவதற்காக சிலர் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கின்றனர். எனவே, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துபவர்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பம் ஏற்படுத்திய 13பேர் கைது!

கொழும்பு, ஓக. 01

நாடு முழுவதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மதியம் முதல் நேற்று காலை வரை இந்தப் 13 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹுங்கம, யக்கல, பாதுக்க, கல்கமுவ, காத்தான்குடி, இமதுவ, கரன்தெனிய, கட்டான மற்றும் பொலநறுவை உள்ளிட்ட பகுதிகளிலேயே இவ்வாறு கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (ஐ)

# பொருளாதார நெருக்கடியால் பாலியல் தொழிலாளர் உயர்வு

## இந்திய ஊடகம் சொல்கிறது

புதுடில்லி, ஓக. 01

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கையில் பெண்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்கியுள்ளனர். இவர்களுள் பலர் தமது வாழ்வாதாரத்துக்காக பாலியல் தொழில்களை நாடுகின்றனர் என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏ. என். ஐ. செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக பெண்கள் பாலியல் தொழில்களை நாடும் நிலை அதிகரித்துள்ளது. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் உரிமைகளுக்காக செயல்படும் Standup Movement lanka என்ற அமைப்பு இதனைத் தெரிவித்ததாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் இலங்கையில் பாலியல் தொழில்துறை 30 சதவீதமாக அதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் தொழில்வாய்ப்பை இழக்கும் பெண்கள் மசாஜ் நிலையங்களுக்கு தொழிலுக்கு செல்வதுடன் பாலியல் ரீதியான தொழில்களிலும் ஈடுபடுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# அரசியல்வாதிக்கு எதிராக பதிவு; ஆசிரியர் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, ஓக. 01

பிரதேச அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக, தனது பேஸ்புக்கில் பதிவு ஒன்றை இட்ட ஆசிரியர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண கல்விச் செயலாளராலேயே மேற்படி சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. பதுளைக்கு அண்மையிலுள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரே, இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியருக்கு எதிராக, சம்பந்தப்பட்ட அரசியல்வாதி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, ஆசிரியருக்கு எதிராக பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த ஆசிரியரின் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என்று இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அரசியல் பின்னணி ஒன்றின் அடிப்படையிலேயே, ஆசிரியரின் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த செயல்பாட்டுக்கு எதிராக, தொழிற்சங்க நடவடிக்கைளை விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கோழைத்தனமான நடவடிக்கையை ஜனாதிபதி ரணில் நிறுத்த வேண்டும்!

## ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார

கொழும்பு, ஓக. 01

"அமைதியான போராட்டக்காரர்களை அடக்கி வேட்டையாடும் கோழைத்தனமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும்." - இவ்வாறு ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம். பி. வலியுறுத்தியுள்ளார்.



போராட்டக்காரர்களின் கைது நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தால் ஓகஸ்ட் 9ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும் நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, மக்கள் எதிர்கொள்ளும் எரிபொருள், எரிவாயு, உரம் மற்றும் மருந்துப் பற்றாக் குறையைத் தீர்ப்பதன் மூலம் மட்டுமே போராட்டத்தை நிறுத்த முடியும் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"அடக்குமுறை அல்லது மிரட்டல் மூலம் போராட்டத்தை ஒருபோதும் நிறுத்த முடியாது. அது அரசியல் நெருக்கடியை மோசமாக்கும். அரசியல் நெருக்கடி மோசமடைந்தால், பொளாதார நெருக்கடிக்கான தீர்வுகளும் தாமதமாகும்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு



# இலங்கை பொருளாதாரம்:

## அடுத்த 6 மாதங்களில் வரிசைகட்டி நிற்கும் பிரச்னைகள்!

ஸ்திரமற்ற அரசியல் சூழல், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு, எரிபொருள் தட்டுப் பாடு உள்ளிட்ட பிரச்னைகளில் இலங்கை திடமான முடிவை எடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இலங்கைக்கு எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் முக்கியமானவை என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

இதேவேளை, சீனாவின் நன்மைகளற்ற திட்டங்கள் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களே, இலங்கை பாதாளத்திற்கு வீழ்வதற்கு காரணம் என அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி தொடர்வதுடன், வட்டி வீதம் அதிகரிக்கின்றமையினால், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களை நடத்தி செல்வது சவாலாக காணப்படுகின்றது.

இயன்றவரை சர்வ பொருளாதார கொள்கை வரைவொன்று நடைமுறைப்படுத்தப்படும் வரை, இலங்கைக்கான புதிய நிதி வசதிகளை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என உலக வங்கி ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையின் கீழ், வர்த்தக நடவடிக்கைகளை நடத்தி செல்வது சிரமமாகியுள்ளதுடன், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தொழில் வாய்ப்புக்களை இழப்பதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**புதிய நிதி வசதிகள் கிடையாது - உலக வங்கி**

கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அதனூடாக இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருப்பதாக உலக வங்கி குறிப்பிடுகின்றது.

அதற்காக பொருளாதார உறுதிப்படுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தி, ஆழமான கட்டமைப்பு திருத்தமொன்று அவசியமாகின்றது என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மருந்து வகைகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு, வறுமை மற்றும் அபாய நிலைமையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கான நிதி வழங்கல், அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்தலுக்காக தாம் தற்போதுள்ள கடன்களின் கீழ் வளங்களை மீள கட்டியெழுப்புவதாகவும் உலக வங்கி தெரிவிக்கின்றது.

இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இன்று வரை 160 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு அவசர தேவைக்காக வழங்கியுள்ளதாகவும் உலக வங்கி கூறுகின்றது.

மேலும், மருந்து, மருத்துவ உபகரணங்களை விநியோகித்தல், பாடசாலை உணவு மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கான கட்டணங்களை தவிர்த்தல் போன்ற நிதி சேவைகளுக்காக தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதாகவும் கூறப்படுகின்றது.




இந்த வளங்கள், வறுமை கோட்டின் கீழ் வாழும் மற்றும் மிகவும் அபாயகர நிலைமையிலுள்ளவர்களுக்கு செல்வதை உறுதிப்படுத்துவதற்கு, வலுவான அரசாங்கம் மற்றும் நம்பிக்கையான கண்காணிப்பை ஸ்தாபித்தலுக்கான நிறுவனங்களுடன் நெருங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உலக வங்கி குறிப்பிடுகின்றது.




**“வரும் 6 மாதத்திற்குள் பாரிய பிரச்னை”**

“நாம் இந்த பொருளாதார மறுசீரமைப்புக்களை செய்ய தவறும் பட்சத்தில், எதிர்வரும் 6 மாத காலத்திற்குள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்” என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கின்றார்.

“பிரிஜ் நிதி கிடைக்கும் என நாம் எதிர்பார்த் தோம். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமாயின், எமக்கு 3 அல்லது மூன்றரை பில்லியன் அமெரிக்க டொலர் (நட்பு நாடுகளிடமிருந்து) கிடைக்கும். அதாவது வருடமொன்றுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வீதம் கிடைக்கும். எனினும், அது கிடைக்கும் வரை எமது அத்தியாவசிய பொருட்களை எவ்வாறு இறக்குமதி செய்வது. அந்த இடத்திலேயே பிரச்சினை உள் ளது. நாம் எதிர்பார்த்த விதத்தில், எமது நட்பு நாடுகளிடமிருந்து பணம் கிடைக்கவில்லை”

“ஏற்றுமதியின் ஊடாக கிடைக்கும் டொலர் எமக்கு இருக்கின்றது. இறக்குமதிக்கு அந்த தொகையை மாத்திரமே செலவிட முடி கின்றது” என கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கின்றார்.

“நாம் கடன் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ள போதிலும், கடனை நாம் நிறுத்தவில்லை. நாம் உலக வங்கியிடமிருந்தும், ஆசிய அபிவிருத்தி வங்கியிருடமிருந்தும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் கடனை நிறுத்த முடியாது. உணவு உட்கொள்ளாதிருந்தேனும், அந்த கடனை நாம் செலுத்த வேண்டும்” என அவர் சுட்டிக்காட்டினார்.

“அந்த கடனை செலுத்துவதற்கு, ஏற்றுமதியின் ஊடாக கிடைக்கும் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்களுடன் கையெழுத்திட்டுள்ள கடன் உடன்படிக்கைகளில் ஆண்டுதோறும் கிடைக்கும் பணத்தை பயன்படுத்த வேண்டும்”

“சர்வதேசத்துடன் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் இது கிடையாது. இந்த சந்தர்ப்பத்தில் தான் சர்வதேசத்துடன் நாம் இணக்கத்துடன் செயற்பட வேண்டும்” என ஹர்ஷ டி சில்வா கூறுகின்றார்.



இலங்கை அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்திற்குள் அதிகாரம் இருந்தாலும், அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு குறைவாகவே காணப்படுவதாக பிரிஷ் ரேட்டிங்க்ஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது. அறிக்கையொன்றை வெளியிட்டு அந்த நிறுவனம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமான சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசியல்வாதிகளில் பலர் நாடாளுமன்றத்திற்குள் இருக்கின்றமையினால், அது தொடர்ந்தும் மக்களின் எதிர்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையலாம் என அந்த நிறுவனம் குறிப்பிடுகின்றது.

பிரிஷ் ரேட்டிங்க்ஸ் நிறுவனமானது, அமெரிக்காவின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கடன் மதிப்பீட்டு நிறுவனமாகும்.

“புதிய ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுதிப்படுத்தப்பட்டதுடன், எதிர்கட்சி உறுப்பினர்களில் பலரும் அவருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். சர்வ பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளில் ஒரு பகுதியாக, கடினமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு போதுமான ஆதரவு இருக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது என பிரிஷ் ரேட்டிங்க்ஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இலங்கை கடனை செலுத்துவதிலிருந்து தவிர்த்த நிலைமையிலிருந்து மீண்டெழுவதற்கான பிரதான காரணமானது, வலுவான அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பது என உலகிலுள்ள மூன்று சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான பிரிஷ் ரேட்டிங்க்ஸ் நிறுவனம் குறிப்பிடுகின்றது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய விடயங்களுடன் தொடர்ந்தும் சவாலான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் கூறுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரண பொதி கிடைக்குமாயின், அதற்கான உயரீய வரி அறவீடு, அரசாங்கத்தின் செலவீ னங்களை கட்டுப்படுத்தல், ஒரு நெகிழ்வான மாற்று விகித நடைமுறையொன்று அமல்படுத்தல் வேண்டும் என பிரிஷ் ரேட்டிங்க்ஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதும், பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக கூறும் அந்த நிறுவனம், சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஏற்படுத்த முடியாத நிலைமை ஏற்படுமாயின், இலங்கை வெளிநாட்டு நிதி நடவடிக்கைகளுக்கு பாரிய அபாயகர நிலைமை ஏற்படும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கை பொருளாதாரம்...




(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜூலை மாதம் நடுப்பகுதியாகும் போது, இலங்கைக்கு எரிபொருள், உணவு மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு மாத்திரமன்றி, நாட்டின் வசம் காணப்பட்ட அந்நிய செலாவணி தொகையான 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே என அந்த நிறுவனம் கூறுகின்றது.

சீனாவிற்கு செலுத்த வேண்டிய கடன் காரணமாக, கடன் தொடர்பிலான பேச்சுவார்த்தை சிக்கலாக காணப்படும் என பிரிஷ் ரேட்டிங்ஸ் நிறுவனம் சுட்டிக்காட்டுவதுடன், 2020ம் ஆண்டு இறுதிக் காலப் பகுதியில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் சீனாவிடமிருந்து பெற்ற கடனாக காணப்பட்டது.

இலங்கை சீனாவிடமிருந்து 13 வீத இரு தரப்பு கடன் மற்றும் சீன அபிவிருத்தி வங்கி மற்றும் சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் என சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகளுக்கு அமைய தெரிய வருகின்றது.

கடன் செலுத்துவது தவிர்க்கப்படுவதற்கு பதிலாக, அதன் முதிர்ச்சி காலத்தை நீடித்தல், கடன் மீள் செலுத்தும் நடைமுறையை மீள தயாரித்தல், நிவாரண காலத்தை பெற்றுக்கொடுத்தல் போன்ற திட்டங்களை சீனா பின்பற்றுமாக இருந்தால், இந்த நடைமுறையானது ஏனைய கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளுக்கு சவாலை ஏற்படுத்தும் என பிரிஷ் ரேட்டிங்ஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது.

**அமெரிக்காவின் விமர்சனத்திற்கு சீனா பதில்**

இலங்கைக்குள் தமது பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் முதலீடுகள் இலங்கையை வளர்ச்சியடைய செய்வதற்கு காரணமாக அமைந்தது என்பதுடன், நாடு பாதாளத்திற்கு வீழ்வதற்கு காரணமாக அமையவில்லை என சீன வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கை பொருளாதார ரீதியில் பாதாளத்திற்கு வீழ்வதற்கு பீஜிங்கின் பயனற்ற திட்டங்கள் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் என அமெரிக்கா அண்மையில் குற்றஞ்சுமத்தியிருந்தது.

"விஞ்ஞான ரீதியிலான திட்டங்கள் மற்றும் முழுமையான சரிபார்த்தல் திட்டங்களின் ஊடாகவே சீன - இலங்கை ஒத்துழைப்புக்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னெடுக்கப்பட்டதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜியன் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

சீன திட்டங்களானது, இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ததாகவும், அது இலங்கை மக்களுக்கு உறுதியான நன்மைகளை கொண்டு வந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா, பல தீர்மானமிக்க நடவடிக்கைகளை எடுத்ததுடன், உண்மையில் வேகமான பதிலை வழங்கப்பட்டாலும், குறிப்பிட்டளவு உதவிகளை வழங்குமாறு சீனாவிடம் கோரிய போதிலும், அதற்கு பதில் கிடைக்கவில்லை என சமந்தா பவர், புதுடில்லியில் வைத்து கூறியுள்ளார்.

இலங்கைக்கு பாரிய கடன்களை வழங்கும் நாடாக சீனா மாறியுள்ளது எனவும், ஏனைய கடன் வழங்குநர்களை விடவும் அதிக வட்டி வீதத்தில் "வெளிப்படையற்ற கடன் உடன்படிக்கைகளை வழங்குவதாகவும்" அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கைக்கு உதவி வழங்க சீனா கடன் திருத்தங்களை மேற்கொள்ளுமா என சிந்திக்க வேண்டும் என சமந்தா பவர் குறிப்பிடுகின்றார்.

சமந்தா பவரின் குற்றச்சாட்டுக்களை சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜியன் நிராகரித்துள்ளார்.

இலங்கைக்கு வெளிநாட்டு கடன் வழங்கும் போது, சர்வதேச மூலதன சந்தைகள் மற்றும் பல அபிவிருத்தி வங்கிகளில் இருந்து இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடன்களில் சீனாவின் கடன் மிகவும் குறைவான பகுதியே காணப்படுகின்றது என அவர் கூறுகின்றார்.

அத்துடன், இலங்கைக்கு சீனா குறைந்த வட்டியிலேயே கடனை வழங்கியுள்ளதாகவும், நீண்ட கால கடன் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் பெறுமதியான பொறுப்புக்களை சீனா நிறைவேற்றியுள்ளதாக அவர் கூறுகின்றார்.

கடன் கொடுக்கல் வாங்கலாக சீனாவினால் 99 வருட குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தலை விமான நிலையம், தாமரை கோபுரம், ஹம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபம், கிரிக்கெட் மைதானம் உள்ளிட்ட திட்டங்கள் இலங்கைக்கு பயனற்றவை என சீனாவின் திட்டங்கள் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பயனற்ற சீன திட்டங்களினால் இலங்கை கடன் சுமையில் சிக்குண்டுள்ளதாக பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், இந்த குற்றச்சாட்டுக்களை சீனா நிராகரித்து வருகின்றது.

இலங்கை பொது கடனை தாங்கிக் கொள்ள முடியாது என சர்வதேச நாணய நிதியம் கடந்த ஜூன் மாதம் 30ம் திகதி மதிப்பீடு செய்துள்ளது.

கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க இலங்கையின் கடனாளிகளிடமிருந்து போதுமான நிதி உத்தரவாதங்கள் தேவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அந்த நிறுவனம் கூறுகின்றது.

**எதிர்வரும் 2 வாரங்கள் தீர்மானமிக்கவை**

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பிலான எதிர்வரும் இரண்டு வாரங்கள் தீர்மானமிக்கவை என வடமேல் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா தெரிவிக்கின்றார்.

"பொருளாதார கோட்பாடுகளை பயன்படுத்தும் போது, 99 வீதம் அனுமானங்களினாலேயே கூறு முடிகின்றது. அந்த கோட்பாடுகளை அவ்வாறே பயன்படுத்த முடியாது. அவற்றை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில், அவசர திட்டங்களுடனேயே பயன்படுத் வேண்டும். இவ்வாறான பணவீக்கம் ஏற்படும் போது, ஏதோ ஒரு வகையில் வர்த்தக சந்தை செயலிழக்கின்றமை, கேள்வி குறைகின்றமை போன்றவை காணமாக அமையலாம்" என அவர் கூறுகின்றார்.

எனினும், எமது பணவீக்கம் அது கிடையாது. தேக்க நிலைமையே காணப்படுகின்றது. இது பணவீக்கம் கிடையாது. பொருளாதாரம் மேல் நோக்கி செல்லாது. எமது பொருளாதாரம் எதிர்மறையாக செல்கின்றது. எதிர்மறையாக இருக்கின்ற போது, பணவீக்கம் என்பது தேக்க நிலையில் இருக்கின்றது என்றே அர்த்தப்படுகின்றது" என அவர் குறிப்பிடுகின்றார்.

ஏற்றுமதி வருமானத்தை கொண்டு வரும் நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலின் முக்கியத்துவத்தையும் அவர் இதன்போது தெளிவூட்டினார்.

"இலங்கையின் முக்கிய ஏற்றுமதி வருமான வழியானது, ஆடைத் தொழில் துறையாகும். அந்த தொழில்துறை மூடப்படும் நிலைக்கு இலங்கை செல்லுமானால், தொழில் இழப்பு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்? பிரதான ஆடைத் தொழில் நிறுவனங்கள் ஆபிரிக்க நாடுகளை நோக்கி தற்போது செல்கின்றன.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டுமானால், நிலையான மத்திய வங்கி வேண்டும். சுதந்திரமாகவும் நடைமுறை ரீதியாகவும் சிந்திக்கக்கூடிய மத்திய வங்கி ஆளுநர் ஒருவர் தேவை".

"இதுவரை எரிபொருளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. நாம் அறிந்த பிரச்சினைகளை எமக்கே கூறுவதற்கு எரிசக்தி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் தேவையில்லை மக்களுக்கு பதில் தேவைப்படுகின்றது" என பேராசிரியர் கூறுகின்றார்.

இரண்டு வாரங்களில் புதிய அரசாங்கமொன்று நியமிக்கப்படும் என அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எதிர்கட்சி இல்லாத நாடாளுமன்றமொன்று தற்போது கட்டாயம் இருக்க வேண்டும். எதிர்கட்சி இருக்கின்ற நாடாளுமன்றம் இருக்குமாயின், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்ள முடியாது"

**பணவீக்கம் அதி உச்சத்தில் உள்ளது**

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில், 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 58.9 வீத பணவீக்கம் காணப்பட்டது.

2022ம் ஆண்டு மே மாதம் 45.3 வீதத்தில் காணப்பட்ட பணவீக்கம், ஜூன் மாதம் 58.9 வீதத்தை அடைந்துள்ளது.

இந்த பணவீக்க அதிகரிப்பானது, உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்களின் விலைகளில் மாதாந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது என கூறப்படுகின்றது.

இதன்படி, உணவு வகையில் வருடாந்த பணவீக்கமானது, 2022ம் ஆண்டு மே மாதத்தில் 58.0 சதவீதத்திலிருந்து ஜூன் மாதம் 75.8 வீதத்திற்கு உயர்வடைந்துள்ளது.

உணவு அல்லாத பொருள் வகைகளின் வருடாந்த பணவீக்கமானது, 2022 மே மாதம் 34.2 வீதத்திலிருந்து ஜூன் மாதம் 43.6 வீதத்திற்கு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது,

2022ம் ஆண்டு ஜூன் மாதம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில், மாதந்தோறும் ஏற்பட்ட மாற்றமானது, 10.19 வீதமாகவும், உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்களின் விலைகளில் முறையே 7.25 மற்றும் 3.66 வீதங்களாக அதிகரித்துள்ளன.

இதனடிப்படையில், அரிசி, மரக்கறி, மீன் வகைகள், சீனி, பால் மா மற்றும் கருவாடு உள்ளிட்ட உணவு வகைகளில் விலைகள் அதிகரித்துள்ளன.

மேலும், உணவு அல்லாத போக்குவரத்து (பெட்ரோல், டீசல், பஸ் கட்டணம்) தளபாடம், வீட்டு உபகரணங்கள், உணவகங்கள் ஆகியவற்றின் விலைகளும் 2022 ஜூன் மாதம் அதிகரித்துள்ளன.

(பிபிசி)







# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)




38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?






1) 2) 3)

39. 3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ.்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ.்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

கல்வி tv CHANNEL-1

**01.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**01.08.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பிரபாகரனின் போராட்டம் சரியானது; சிங்கள மக்கள் இன்று உணர்ந்துள்ளனர்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம்

கல்முனை, ஓக.01

அன்று பிரபாகரன் அவர்களின் போராட்டம் பிழையானது என கூறிய சிங்கள மக்கள் இன்று அது சரியானது என்பதை உணர்ந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்த அரசாங்க பொது ஊழியர் சங்கம், வடக்கு ஆளுநரின் சர்வதிகார போக்கைக் கண்டிப்பதுடன் உடன டியாக ஆளுநரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங் கத்தை கோரியுள்ளது.

சங்கத்தின் கல்முனை தலைமை யகத்தில் நேற்றுமுன்தினம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோக நாதன் நடத்திய செய்தியாளர் சந்திப் பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகா ணங்களின் 3 அமைச்சு செயலாளர்கள் அதிரடியாக ஆளுநரால் சர்வதிகார போக்கில் இடம்மாற்றப்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த இடமாற் றத்தை எமது தொழிற்சங்கமானது கண்டிக்கின்றது. ஆளுநர் தனது அதி காரம் அரச நிர்வாக நடைமுறையை குழப்புகின்றார். ஆளுநரை தட்டிக் கேட்பதற்கு ஆட்கள்

இல்லை என்ற காரணத்தால்தான் அமைச்சுக்களின் செயலாளர்களை தற்போது இடமாற்றியுள் ளார். நாங்கள் அமைதியாக இருப்பதனால் தான் ஆளு நரால் இவ்வாறான நடவ டிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.



எமது தொழிற்சங்கத்தை பொறுத்த வரையில் வடக்கு -கிழக்கில் இருந்த முன்னாள் ஆளுநர்களுடன் மோதி இருக் கின்றோம். ஊழியர்களுக் கும் உத்தியோகத்தர்களுக் கும் அநீதி இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எமது தொழிற் சங்கமானது அதனை தட்டி கேட்டி ருக்கின்றது.

வெளியிடங்களில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்ட ஆளு நர்கள்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வகித்தனர். இவ்வாறு வெளியிடங் களில் இருந்து ஆளுநர்களை இறக்குமதி செய்வதால்தான் சர்வதிகார போக்கு நிகழ்கின்றது.

தற்போதைய ஆளுநர்களை உடன டியாக நீக்கி விட்டு வெளியிடங்களில் இருந்து ஆளுநர்களை நியமிக்காது வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்களை ஆளு நர்களாக நியமிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம்.

13ஆவது அரசியல் அமைப்பு சட்டத் திற்கு அப்பால் சென்று இந்த மாகாணத் துக்கு மாநில சுயாட்சியை பெற வேண் டும் என்பதே எமது விருப்பமாகும். இவ் வாறு செயல்படும் போதுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்ய முடியும்.

கடந்த 74 வருடங்களுக்கு முன்னர் விட்ட தவறுகளை புதிய அரசாங்கம் விடக்கூடாது. ஏனெனில், இந்த 74 வருடங்களாக அரசாங்கம் விட்ட தவறு களால்தான் பிரபாகரன் போன்றவர்கள் ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

பிரபாகரன் ஏன் ஆயுதம் ஏந்தி போராடினார் என்பதை சகலரும் உணர வேண்டும். தமிழ் பேசும் எங்க ளுக்கு பல அநியாயங்கள் நடந்திருக்கின் றன. எங்களை நாங்கள் ஆளக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. இவ்வாறாக ஜனநாயக முறை மீறப்பட்ட மையால் தான் பிரபாகரன் போன்றோர் உருவாகி னார்கள். அவரது போராட்டம் நியாய மான போராட்டமாகவும் மக்கள் போராட்டமாகவும் இருந்ததை நாம் ஏற் றுக்கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கை ஆளக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பை கேட்டுத்தான் அவர் போராடினார்.

அவர் தனிப்பட்ட முறையில் எது வும் கேட்கவில்லை. மக்களுக்காகவே அவர் போராடினார். வட, கிழக்கு மக் களை ஆளக்கூடிய நிர்வாகத்தை தாருங் கள் என பிரபாகரன் அண்ணன் கேட்டார். அதில் என்ன தவறு உள்ளது. சேனநாயக்க முதல் கோட்டாபய வரையிலான ஆட்சியாளர் கள் விட்ட தவறால்தான் சிறுபான்மை மக்கள் சின்னாபின்னமாகி உள்ளனர். புதிய அரசாங்கமானது 74 வருடங்களாக விட்டி ருந்த தவறுகளை விட வேண்டாம்.

இன்றுகூட சிங்கள மக்கள் இதனால் தான் போராட்டத்தை ஆரம்பித்துள் ளார்கள். தமிழ் மக்களின் கடந்த கால போராட்டம் நியாயமானது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

அன்று பிரபாகரன் அவர்களின் போராட்டம் பிழையானது என கூறிய சிங்கள மக்கள் இன்று அது சரியானது என்பதை உணர்ந்திருக்கின்றார்கள் - என்றார். (ஐ-1)

# சம்மாந்துறை மருத்துவமனைக்கு கண் சிகிச்சை உபகரணங்கள்!

சம்மாந்துறை, ஓக. 01



சம்மாந்துறை ஆதார மருத்து வமனையின் கண் சத்திர சிகிச்சை பிரிவின் வசதிகளை மேம்படுத் தும் வகையில் அதிநவீன கண் சத்திர சிகிச்சை உபகரணங் கள் வழங்கி வைக்கப்பட் டன.

சம்மாந்துறை பொது மக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சம்மாந்துறை நம்பிக்கை யாளர் சபை, மஜ்லிஷ் அஷ்ஷூரா, உலமா சபை போன்ற முச்சபைகளின் வழி காட்டலின் கீழ் பொதுமக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியில் கொள்வனவு செய்யப்பட்டு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

உபகரணங்களை உத்தியோகபூர்வ மாக கையளிக்கும் நிகழ்வு மருத்துவ மனையின் அபிவிருத்திக் குழுவின் தலைவர் மருத்துவர் ஏ.இஸ்ஸதீன் தலைமையில் மருத்துமவனை மண் டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு உபகரணத்தொகுதியை வைத் தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபீக், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தி யட்சகர் மருத்துவர் அஸாத் எம்ஹனிபா மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

# சின்னமுகத்துவாரத்தில் தண்ணீர் வெளியேற்றம்!

ஆலையடிவேம்பு, ஓக. 01

அம்பாறை - ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிர தேசம் நேற்று முன்தினம் அகழ்ந்து விடப்பட்டது.

வடிந்து வரும் தண்ணீரின் அளவு அதிகரித்தமையால் அப்பகுதியை சூழவுள்ள ஆயிரம் ஏக்கர் வயல் நிலங் கள் நீரில் மூழ்கின.

எனவே, அந்த நிலங்களில் மேற் கொள்ளப்படும் பயிர்களை கைவிடும் நிலை ஏற்படு வதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்த ஆற்றுமுகம் அகழ்ந்து விடப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக அதிகாரிகளின் களவிஜயத்தைத் தொடர்ந்தே தண்ணீரை அகழ்ந்து விடு வது என்று முடிவு எடுக்கப்பட்டு நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# நடந்து சென்ற இளைஞரை மோதித்தள்ளி கொன்றது பஸ்!

வாழைச்சேனை, ஓக. 01

வீதியில் நடந்து சென்ற இளை ஞரை இ. போ. சவுக்கு சொந்தமான பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி மொறக் கொட்டாஞ்சேனை விஷ்ணு ஆலயத் துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

மாவடிவேம்பு 2 ஆம் பிரிவைச் வேணுகோபலன் (வயது 27) என்ப வரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர், வீதியால் நடந்து வந்து கொண்டிருந்தபோது மட்டக்களப்பில் இருந்து வாழைச் சேனை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து அவரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரழந்தவரின் சடலம் வாழைச் சேனை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பேருந் தின் சாரதியை சந்திவெளி பொலி ஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# உகந்தைமலை முருகன் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

மட்டக்களப்பு, ஓக. 01



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடி வேல் விழா கொடியேற்றம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆலயபிரதம குரு சிவசிறி க. கு. சீதாராம் குருக்கள் தலைமையில் ஆயிரக்கணக் கான பக்தகர்களின் பங்கேற் புடன் இந்தத் திருவிழா இடம்பெற்றது.

ஆலய வண்ணக்கர் சுது நிலமே திஸநாயக்கவின் ஏற் பாட்டில் சரியாக காலை 11.20 மணியளவில் அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க கொடியேற்றம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

தொடர்ச்சியாக13 நாட்கள் திரு விழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 11ஆம் திகதி உகந்தைமலை சமுத்தி ரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

இது இவ்வாறு இருக்க கதிர் காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்கள் தொடர்ச்சியான மழையால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், இது வரை 20 ஆயிரம் அடியார்கள் காட்டுக் குள் பிரவேசித்து பயணிக்கின்றனர் என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுத்தமான சூழலில் வாழ்வது மனிதனின் அடிப்படை உரிமை!

## ஐ. நாவில் நிறைவேறியது தீர்மானம்

நியூயோர்க், ஓக. 01

சுத்தமான சூழலில் வாழ்வது ஓர் அடிப்படை உரிமை என்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தை உலக நாடுகள் மிகவும் தீவிர பிரச்னையாகப் பார்த்து வருகின்றன. காற்று மாசு காரணமாக மனிதர்களின் வாழ்நாள் குறைந்து வருகிறது என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. எனவே, காலநிலை மாற்றத்தை

எதிர்கொள்ளவதற்கான திட்டங்களை அனைத்து நாடுகளும் செயல்படுத்த தொடங்கியுள்ளது. இலக்கு வைத்து காபன் உமிழ்வை குறைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

இதற்கு வலு சேர்க்கும் விதமாக சுத்தமான சூழலில் வாழ்வது அடிப்படை உரிமை என்று ஐ. நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓர் எதிர்ப்பும் இல்லாமல் இந்த தீர் மானம் ஐ. நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஐ. நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் சுத்தமான, பாதுகாப்பான, ஆரோக்கியமான ஒரு சூழலில் வாழ்வது என்பது ஓர் அடிப்படை மனித உரிமை என்று தெரிவித்தது.

கோஸ்டாரிக்கா, மாலைதீவு, மொராக்கோ, ஸ்லோவேனியா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தை 43 நாடுகள் ஆதரித்தன. இதனைத் தொடர்ந்த ஒரு மனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானம் கடந்த வாரம் ஐ. நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு 161 நாடுகள் ஆதரவு அளித்தன. ஒரு நாடுகூட எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. சீனா, ஈரான், ரஷ்யா கூட்டமைப்பு உள்ளிட்ட நாடுகள் இதில் கலந்து கொள்ளவில்லை.

இந்தத் தீர்மானத்தின்படி சுத்தமான, பாதுகாப்பான, ஆரோக்கியமான ஒரு சூழலில் வாழ்வது என்பது ஓர் அடிப்படை மனித உரிமையாக மாற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின்படி காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்னைகளுக்கு உலகளவில் ஒரு தீர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. குறிப்பாக, இந்த தீர்மானத்தின்படி ஐ. நா. சபை உறுப்பு நாடுகள் சுற்றுச்சூழலை பாதுகாத்து, காலநிலை மாற்றத்தை தடுத்து சுத்தமான, பாதுகாப்பான, ஆரோக்கியமான ஒரு சூழலிலை எற்படுத்தி கொடுக்க வேண்டும். (ஐ)



## பாகிஸ்தான் பெருவெள்ளம் 18 பேர் பலி; 40 பேர் காயம்!

இஸ்லாமாபாத், ஓக. 01

பாகிஸ்தானில் தொடர் மழை, வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட அனர்த்தங்களில் சிக்கி 18 பேர் உயிரிழந்தனர். மேலும் 40இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் தரவுகளின்படி கஜினி மாவட்டத்தில் 10 பேர், கந்தஹாரில் 6 பேர் மற்றும் ஹெராட்டில் 2 பேரும் இறந்தனர்.

மூன்று மாகாணங்களில் இரண்டு நாட்களாக ஏற்பட்ட வெள்ளத்தால், உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக, பல வீடுகளும் முற்றாக அழிவடைந்தன என்று பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் பேச்சாளர் மொஹமட் நசிம் ஹக்கானி தெரிவித்தார்.

படக்ஷான், குனார், நூரிஸ்தான், லக்மான், நங்கர்ஹார், காபூல், கஜினி, ஜாபுல், காந்தஹார், லோகார், பக்தியா மற்றும் பக்திகா ஆகிய பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் மழை தொடர்ந்தது. (ஐ)



## கோவிட் தொற்று நோயாளர்களால் திணறும் ஆஸி. மருத்துவமனைகள்

### 12,000ஐ நெருங்கும் மரணங்கள்

சிட்னி, ஓக. 01

அவுஸ்திரேலிய மருத்துவமனைகள் கோவிட் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பால் பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள அதேவேளை அவுஸ்திரேலியாவில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை நெருங்குகின்றது.

அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று நாட்களாக கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 100இற்கும் அதிகமானதாகக் காணப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமை 30 பேர் உயிரிழந்தனர் இதனால், கோவிட் தொற்றால் அவுஸ்திரேலியாவில்

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11832ஆக அதிகரித்துள்ளது.

24,000 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்களில் அரைவாசிப் பேரே இனங்காணப்பட்டுள்ளனர் என கருதுவதாக தெரிவித்துள்ள விக்ரோறியாவின் தலைமை மருத்துவ அதிகாரி பிரெட் சட்டன் தனது மாநிலம் உச்சநிலையை தொட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் விக்ரோறியாவில் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து பின்னர் வீழ்ச்சியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள்

எங்களை சுற்றியுள்ளவர்கள் மருத்துவமனைகள் குறித்து சிந்திக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பொது மருத்துவமனைகளில் 12 இல் 1 கொரோனா நோயாளர்களால் நிரம்பியுள்ளது. எனினும் முன்னர் போல இல்லாமல் குறைந்தளவான வர்களே தீவிரசிகிச்சை பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தாய்வானுக்கு அருகில் சீனா போர் ஒத்திகை!

பீஜிங், ஓக. 01

சர்ச்சைக்குரிய தாய்வான் தீவுக்கு அருகே போர் ஒத்திகையில் ஈடுபட்டதாக சீனா அறிவித்துள்ளது.

தாய்வானை சீனா தனது அங்கமாக கருதி வருகிறது. இந்நிலையில், தாய்வான் அமெரிக்காவுடன் நட்பு பாராட்டி வருகிறது. இதையடுத்து, அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், இது குறித்து சீன அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹூவா தெரிவிக்கையில்,

பூஜியன் மாகாணத்தை ஒட்டிய பிங்டன் தீவில் சீன இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டது. காலை 8 மணி முதல் 9 மணி வரை நடைபெற்ற இந்த போர் ஒத்திகையில், உண்மையான குண்டுகளும் வெடி பொருள்களும் பயன்படுத்தப்பட்டன என்று அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், அந்த போர் ஒத்திகையில் ஏவுகணைகள், போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டனவா என்பது குறித்து தகவல் இல்லை.

சீன உள்நாட்டுப் போருக்குப் பிறகு தாய்வான் தனி நாடாக செயல்பட்டு வந்தாலும், அந்தத் தீவை தங்கள் அங்கமாகவே தற்போதும் சீனா கருதி வருகிறது. தாய்வானை சீனாவுடன் இணைத்துக் கொள்ள தங்களுக்கு உரிமை இருப்பதாகவும், அதற்குத் தேவைப்பட்டால் இராணுவ பலம் கூட பயன்படுத்தப்படும் என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கூறி வருகிறார். இந்த நிலையில், நான்சி பெலோசி அந்தத் தீவுக்கு பயணம் மேற்கொள்ளக்கூடும் என்று கடந்த வாரம் தக வல் வெளியானது. அது உறுதியானால், கடந்த 1997ஆம் ஆண்டுக்குப் பிறகு தாய்வான் செல்லவிருக் கும் முதல் அமெரிக்க உயர்நிலை எம்.பி.யாக பெலோசி இருப்பார்.

இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. தாய்வான் விவகாரத்தில் தலையிடுவதன் மூலம் அமெரிக்கா நெருப்போடு விளையாடுகிறது என்று ஜி ஜின்பிங் எச்சரித்தார். இந்தச் சூழலில், தாய்வானுக்கு அருகே சீனா தற்போது போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது.

## ஆபிரிக்காவுக்கு வெளியிலும் குரங்கு அம்மையால் மரணம்!

### பிரேசில், ஸ்பெயினில் பதிவு

ஜெனிவா, ஓக. 01

குரங்கு அம்மை பாதிப்பால் பிரேசில் மற்றும் ஸ்பெயினில் முதல் மரணங்கள் பதிவாகியுள்ளன. இரு நாடுகளிலும் தலா ஒருவர் உயிரிழந்தனர். இதன்மூலம் குரங்கு அம்மையால் ஆபிரிக்காவுக்கு வெளியே உயிர்ப் பலி இல்லை என்ற நிலை மாறியுள்ளது.

பிரேசிலில் குரங்கு அம்மையால் 41 வயதான ஆண் ஒருவர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது. இவர்தான் ஆபிரிக்காவுக்கு வெளியே குரங்கு அம்மையால் பலியான முதல் நபர் என தகவல்கள் கூறுகின்றன. கடுமையான நோய் எதிர்ப்பு பிரச்னைகள் இவருக்கு இருந்தன என்றும் அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

ஸ்பெயிலும் ஒருவர் குரங்கு அம்மை தொற்றால் உயிரிழந்தார். இவர் குறித்து எந்தத் தகவலையும் அந்த நாடு வெளியிடவில்லை.

பிரேசிலில் இதுவரை 1,066 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 513 பேர் வைரஸ் அறிகுறிகளுடன் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர்.

பிரேசில் சுகாதார அமைச்சின் தரவுகளின்படி அந்நாட்டில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டவர்களில் 98வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஓரின சேர்க்கையாளர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் இதுவரை 3,750 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 120 பேர் அல்லது 3.2வீதமானர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான மையத்தின் தரவுகளின் பிரகாரம் உலகம் முழுவதும் இதுவரை 21,148 பேர் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## என்னால் பதவி விலகமுடியும் ஆனால், ஓய்வு அவசியமில்லை!

### போப் பிரான்சிஸ்

ஒட்டாவா, ஓக. 01

"இன்றுவரை ஓய்வுக் கதவை நான் தட்டவில்லை. என்னால் பதவி விலக முடியும். ஆனால், ஒய்வுகான அவசியம் எனக்கு தற்போது ஏற்படவில்லை" என போப் பிரான்சிஸ் தெரிவித்திருக்கிறார்.

போப் பிரான்சிஸ் இந்த வாரம் தொடக்கத்தில் கனடாவுக்கு பயணம் சென்றிருந்தார். இந்தப் பயணித்தின் முடிவில் போப் பிரான்சிஸ்பத்திரி கையாளர் சந்திப்பில் பங்கேற்றார். அப்போது அவரின் ஓய்வு குறித்தும், உடல் நலம் குறித்தும் கேள்வி எழுப்பினர். அதற்கு போப் பிரான்சிஸ் அளித்த பதிலில்,

"இந்த கனடா பயணம் தீவிரமாகவும் ஆழமாகவும் இருந்தது. இன்றுவரை ஓய்வுக் கதவை நான் தட்டவில்லை. என்னால் பதவி விலக முடியும். ஆனால், ஒய்வுக்கான அவசியம் தற்போது எனக்கு ஏற்படவில்லை.

உடல் நிலையை கருத்தில் கொண்டால் பதவி விலகுவது குறித்து பரிசீலிக்க வேண்டிய நேரம் விரைவில் வரக்கூடும். ஆனால், இப்போது இல்லை. இந்த வயதில் முழங்கால் வலியுடன் என்னால் தொடர்ந்து பயணிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. தேவாலயத் துக்கு தொடர்ந்து சேவை செய்ய நினைக்கிறேன். அதற்கு என்னை நான் ஆரோக்கியமாக வைத்து கொள்ள வேண்டும்" என்றார். (ஐ)

# சிம்பாவேயுடனான தொடர் தவான் மீண்டும் தலைவர்!



புதுடில்லி, ஓக. 01

சிம்பாவே அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவேயில் இந்தியா சுற்றுப்பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

எதிர்வரும், 18, 20, 22 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிகள் ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நடக்கவுள்ளது. இதற்காக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ள இந்திய அணியில் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி போன்ற முன்னணி வீரர்களுக்கு இந்த தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

ஹர்திக் பாண்ட்யா, ஷ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், ஜஸ்பிரித் பும்ரா, ரவீந்திர ஜடேஜா, முகமது ஷமி, யுஸ்வேந்திர சாஹல் போன்ற முன்னணி வீரர்கள் அனைவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிய கோப்பை தொடர், இருபது - 20 உலகக்கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இவர்களுக்குப் பதிலாக மேற்கிந்திய தீவுகள் தொடரில் இந்திய அணியை வழிநடத்திய ஷிகர் தவான் மீண்டும் அணித்தலைவாக அறிவிக்கப்பட்டுள்ளார். இதேபோல், வேகப்பந்துவீச்சாளர் தீபக் சாஹர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். கடந்த சில மாதங்களாக காயம் காரணமாக அவதிப்பட்டுவந்த தீபக் சாஹர் அதற்கு சிகிச்சை பெற்றுவந்தார். இதனால் நடந்துமுடிந்த ஐ. பி. எல். தொடரில் சாஹர் பங்கேற்கவில்லை. இந்நிலையில் தான் காயம் குணமடைந்து மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

அணி விவரம்: ஷிகர் தவான் (அணித்தலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், ஷப்மான் கில், தீபக் ஹூடா, ராகுல் திரிபாதி, இஷான் கிஷன், சஞ்சு சாம்சன், வாஷிங்டன் சுந்தர், ஷர்துல் தாகூர், குல்தீப் யாதவ், அக்சர் படேல், அவேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ் , தீபக் சாஹர். (ஐ)

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது இந்தியா!

பர்மிங்ஹாம், ஓக. 01

பாகிஸ்தான் அணியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது இந்திய மகளிர் அணி.

பொதுநலவாய விளையாட்டு போட்டி இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் நேற்று நடைபெற்ற பெண்கள் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி தனது 2ஆவது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் மோதியது.

இந்த போட்டியின் தொடக்கத்தில் மழை குறுக்கிட்டதன் காரணமாக நாணயச் சுழற்சி போடுவது தாமதமானது. பின்னர் நடந்த நாணயச் சுழற்சியில் பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

மழையின் காரணமாக போட்டியில் இரு ஓவர்கள் குறைக்கப்பட்டு 18 ஓவர்களாக நிர்ணயம் செய்யப்பட்டது. தொடக்க வீராங்கணையாக களமிறங்கிய முனிபா அலி 32 ஓட்டங்கள் எடுத்தார். அவருடன் களமிறங்கிய மற்றொரு தொடக்க வீராங்கணையான இரம் ஜாவத் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அணியின் தலைவி பிஸ்மா மஹ்ரூப் 17 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் தடுமாறிய பாகிஸ்தான் அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. இறுதியில் அந்த அணி 18 ஓவர்களில் அனைத்து



விக்கெட்களையும் இழந்து 99 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 100 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது.

தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய ஷபாலி வர்மா 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஸ்மிருதி மந்தனா அதிரடியாக விளையாடி 42 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸருடன் 63 ஓட்டங்கள் குவித்தார். இறுதியில், இந்திய அணி 11.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து இலக்கை கடந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (ஐ)



# பொதுநலவாய விளையாட்டு; இலங்கைக்கு முதல் பதக்கம்!

பர்மிங்ஹாம், ஓக. 01

பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை முதலாவது பதக்கத்தைப் பெற்றுள்ளது. பளு தூக்கல் போட்டியில் டிலங்க இசுறு குமார வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் பொதுநலவாய போட்டிகள் நடக்கின்றன. இதில், நேற்று ஞாயிற்றுக் கிழமை காலையில் நடந்த போட்டியில் இலங்கை சார்பில் டிலங்க இசுறு குமார பங்கேற்றார்.

இவர், ஆண்களுக்கான 55 கிலோ கிராம் இடைப்பிரிவில் போட்டியிட்ட அவர் மொத்தமாக 225 கிலோ கிராம் எடையை தூக்கி முதலாவது வெண்கலப் பதக்கத்தை நாட்டுக்காக வென்று கொடுத்தார்.

இதேவேளை, 55 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த சங்கேத் மகாதேவ் சர்கார் 248 கிலோ எடை தூக்கி இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இதன் மூலம் அவர் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ஐ)

# உலக ஜூனியர் தடகளம் தவறவிட்டது இலங்கை!

கொழும்பு, ஓக. 01



உலக ஜூனியர் தடகள சம்பியன்ஷிப் போட்டியை இலங்கை தவறவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தடகள வீரர்கள், கொலம்பியாவில் நடக்க உள்ள உலக ஜூனியர் தடகள சம்பியன்ஷிப் போட்டிக்கு செல்வதற்கான விமான ரிக்கெற்றுகளை அதிகாரிகள் உரிய நேரத்தில் வழங்கத் தவறியதால், திட்டமிட்டபடி செல்ல முடியவில்லை.

இன்று முதல் முதல் 6ஆம் திகதி வரை, கொலம்பியாவின் காலி நகரில் உலக ஜூனியர் தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோபா அமெரிக்கா கிண்ணம் பிரேஸில் மகளிரரணி வசம்!

பிரேஸிலியா, ஓக. 01

டெபின்ஹா முதல் பாதி ஆட்டத்தில் அடித்த கோல் மூலம் கொலம்பியாவை 1 - 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது பிரேஸில் அணி. இதன் மூலம் நான்காவது முறையாக பெண்களுக்கான கோபா அமெரிக்க கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தத் தொடரில் பிரேஸில் 9 போட்டிகளில் 8 வெற்றிகளை பெற்றிருந்தது. இந்தக் கிண்ணத்தை பிரேஸில் வென்றதன் மூலம் பியா சுந்தகே முதல் பெண் பயிற்றுநர் என்ற பெருமையைப் பெற்றார்.

பட்டத்துக்கான பாதையில் அவரின் அணி 6 போட்டிகளில் 20 கோல்களை அடித்தது.

பட்டம் வென்ற அணிக்கு 15 இலட்சம் அமெரிக்க டொலர்களும், இரண்டாம் இடம்பெற்ற அணிக்கு 5 இலட்சம் டொலர்களும் பரிசாக வழங்கப்பட்டன.

முதல் மூன்று இடங்களுக்குள் இடம்பிடித்ததன் மூலம் இரு அணிகளும் 2023 உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றுள்ளன. (ஐ)



# இன்னொரு கொரோனா அலையை தாங்கும் பலம் நாட்டுக்கு இல்லை!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.01

**இன்னுமொரு கோவிட் அலையை தடுப்பதற்கு ஆகக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முதலாம் இரண்டாம் கோவிட் அலையை எதிர் கொண் டதுபோல இன்னோர் அலையை எதிர்கொள்வதற்கான பலம் எம்மிடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் பொதுசெயலாளர் ஹரித அளுத்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும்காலத்தில் நாட்டை முடக்குவது சாத்தியமில்லை. ஆகவே, புதிய அலை உருவாவதை தடுப்பதற்கு பொறுப்புள்ள அதிகாரிகள் பலன ளிக்ககூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

நாளாந்தம் அறிவிக்கப்படும் எண்ணிக்கைக்கு அப்பால் கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை குறிப் பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. குறைந்தளவு சோதனை வசதிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளின்போதே நாளாந்தம் 150 நோயாளர்கள் இனம் காணப்படுகின்றனர்.

கோவிட் தொற்றால் உயிரிழப்பவர் களின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரித்துள்ளது.

புதிய கோவிட் மாறுபாடே பரவிவரு கின்றது பாதிக்கப்பட்ட ஒருவர் மூலம் சுமார் 12 பேருக்கு பரவக்கூடிய தன்மை வாய்ந்தது இந்த புதிய மாறுபாடு. சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் ஏனைய டெல்டா மாறுபாடுகளை விட இதன் பரவும் தன்மை அதிகம். புதிய தகவல்களின்படி நோயாளர்களின் எண்ணிக்கைக்கு சமாந்திரமாக உயிரி ழப்பும் அதிகரிக்கலாம் என்றும் தெரிய வருகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 01

இரத்தினபுரி எலபாத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், உள்நாட்டு துப் பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார்.

பொலிஸாருக்கு வழங்கப் பட்ட தகவலையடுத்து பொலி ஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இது தொடர்பில், பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (கே)

## ஆற்றில் நீராடியவர் காணாமல் போனார்

கொழும்பு, ஓக. 01

இரத்தினபுரி கலவானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீபாகம பிரதேசத்தில், ஆற் றில் நீராட சென்ற நபரொ ருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் என்று, பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மீபாகம, கலவான பிரதே சத்தை சேர்ந்த 22 வயது இளைஞரே இவ்வாறு காணா மல் போயுள்ளார்.

நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த போதே குறித்த நபர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர், பொலி ஸார், பிரதேச மக்கள் இணைந்து காணாமால் போனவரை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (கே)

## திருட்டில் ஈடுபட்டுவந்த மூவர் போதைப் பொருளுடன் கைது!

கொழும்பு, ஓக. 01

அம்பாந்தோட்டை, தங் கல்ல பொலிஸ் பிரிவில் வீடுக ளில் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் ஹெரோயினுடன் கைது செய் யப்பட்டுள் ளனர் என்று, தங் கல்ல பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

தங்கல்ல பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட ரன்ன பிரதே சத்தில் பொலிஸார் நேற்று முன் தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது10.3 கிராம் ஹெரோயினுடன் ஒரு வர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது சந் தேக நபர், பல வீடுகளில் பெறு மதிவாய்ந்த பொருட்களை திரு டிய குற்றத்துடன் தொடர்பு டையவர் என்று தெரியவந்துள் ளது.

அத்துடன், சந்தேக நபர் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைவாக திருட்டுக்களுடன் தொடர்புடைய மேலும் இரு வரை பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

தங்கல்ல, ரன்ன ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22, 28, 30 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (கே)

## ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைவு; மேலும் ஐந்து இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதியின் இல்லத் துக்குள் நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளை வித்தனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுவரெலியா, கலுகெலே - பொனஸ்டா பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தின் பிடியாணையை நிறைவேற்றுவதற்காக சந்தேக நபர்களில் ஒருவரின் வீட்டுக்கு பொலிஸார் சென்றபோது, அந்த வீட்டில் மேலும் நான்கு இளைஞர்கள் தங்கியிருந்தனர்.

அவர்களுக்கும் இது தொடர்பான குற்றச்சாட்டுடன் தொடர்பு இருப்பது தெரிய வந்தது.

விசாரணையில், கைதான இளைஞர்கள் மேற்படி சம்ப வத்துடன் தொடர்பு இருந்த தால், நண்பரின் வீட்டில் தலை மறைவாக தங்கியிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித் தனர். கைதானவர்கள் வெவ் வேறு மாவட்டங்களை சேர்ந் தவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## சர்வகட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஆட்சியை தக்க வைப்பதற்கு முயற்சி

### ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு, ஓக. 01

சர்வகட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு, தற்போதைய ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என்றும் சிறந்த ஆட்சியாளரை தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். மேலும்,

நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடிக்கு தீர்வாக நாட்டுக்காக அர்ப்பணிப் புடன் செயற்படக்கூடிய நிலையான அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது.

எனினும், அவ்வாறான ஓர் அரசாங்கத்தை அமைப்பதற்கு தற்போது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி வைத்திருக்கும் அரசாங்கம் தயாராக இல்லை.

சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக வாருங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க சகல கட்சிகளுக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்து வருகின்றார். அதனுடன், அரசாங்கத்துக்கு எதிராக போராடிய ஒவ்வொரு குழுக்களையும் ஒடுக்கும் செயல்பாடுகளையும் அவர் முன்னெடுத்து வருகின்றார்.

எனவே, சர்வகட்சி அரசாங்கம் என்ற சொல்லை வைத்துக்கொண்டு ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிடுவதற்காக இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றே கேட்கவிளைகின்றோம்.



மக்கள் வீதிக்கு வந்து ரணில் விக்கிரமசிங்க வேண்டும் என்று கோரவில்லை.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில், ஆட்சியில் இருப்பவர்கள் அதிகாரத்தை பலவந்தமாக கைப்பற்றி ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயத்தை தனக்கு சாதக மாக பயன்படுத்திக்கொள்வதற்கான முயற்சில் தற்போதைய ஜனாதிபதி ஈடுபட்டு வருகின்றார்.

தற்போது கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை அரசியல் அமைப்புக்கு அமைவாக தக்கவைத்துக் கொள்ளவே அவர் பார்க்கின்றார். எனவே, சிறந்த ஆட்சியாளரை தெரிவுசெய்வதற்கான சந்தர்ப் பத்தை மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்குமாறே நாம் இந்த அரசாங்கத்தை கோரிகின்றோம் என்றார்.

## விமானப்படை வாகனம் ரயிலுடன் மோதிய விபத்தில் சிப்பாய் மரணம்!



கொழும்பு, ஓக. 01

களுத்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலுடன் விமா னப்படை வாகனம் மோதி விபத்துக்குள் ளானதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

விபத்தில் காயம டைந்த மற்றுமொரு சிப்பாய் வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளார் என்று களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித் தனர்.

வீரவில விமானப் படை முகாமில் கடமையாற்றி வந்த வெல்லவாய பிரதேசத்தை சேர்ந்த சிப்பாயே உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை 1.33 மணியளவில் குறித்த ரயிலுடன் களுத்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தாகவும், வான் கடற்கரையி லிருந்து காலி வீதி நோக்கி பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக திருப்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## எரிபொருள் பதுக்கிய இருவர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 01

கொழும்பு - பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் , சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருந்த இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கந்தளாய், காலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36, 42 வயது டைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 84 லீற்றர் டீசல், 31 லீற்றர் பெற்றோல் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (கே)

### இனப் பிரச்னை...

ஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி - இராமநாதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த மண்ணிலே புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் பேசுவோம் அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடும் நாம் பேசுவோம்.

ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 தடவைகள் பேசியிருக்கிறது. கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஒரு தடவை பேசியிருக்கிறது. இவ்வாறு இந்த நாட்டில் யார் யார் எல்லாம் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் தமிழர் தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3 ஆம் திகதி (நாளை மறுநாள்) பாராளுமன்றில் தனது அக்கிராசன உரையை நிகழ்த்தவுள்ளார். இந்த உரையில் புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்னை தொடர்பில் கருத்து தெரிவிப்பாரா? அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்று அநுராதபுரத்தில் பதவியேற்ற போதும் சரி தனது அக்கிராசன உரையிலும் சரி மக்களால் விரட்டியடிக்கப்படும் வரை தமிழர்களின் பிரச்னை தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசாதது போன்று இவரும் செயல்படுவாரா? எனும் சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது.

40 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி இந்த நாடு இப்படி பொருளாதார ரீதியில் அதலபாதாளத்திற்கு போவதற்கு பிரதான காரணமாக இருந்தது ஓர் இனத்தின்மீது நடைபெற்ற போர்தான் என்பதை புரிந்து வைத்திருப்பார். எம் மீது நடைபெற்ற இனவழிப்பின் பங்காளியாக இருந்தவர் எமது விடுதலைப் போராட்டத்தை சூழ்ச்சியால் பிரித்த ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்ய வேண்டும் என்றால் முதலில் இனப் பிரச்னையை தீர்க்க வேண்டும் - என்றும் இதன்போது கூறினார். (ஐ)

### டெங்கு...

ரிட்ஜ்வே மருத்துவமனையின் பணிப்பாளருமான விசேட மருத்துவ நிபுணர் ஜீ. விஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், டெங்கு நுளம்புகள் பரவாத வகையில் சுற்றுச்சூழலை பாதுகாப்பாக மக்கள் வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்பட்டால் அல்லது காய்ச்சல் ஏற்படுமாயின் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும்.

இந்நாட்களில் வயதானவர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. தொண்டை வலி, காய்ச்சல், இருமல், சளி போன்றவை புதிய வைரஸ் நோய்க்கான அறிகுறிகள் எனவும் அவர் கூறினார்.

வைரஸ் தொற்று குணமடைந்த பின்னரும் சிலருக்கு இருமல் நீடிக்குமாயின் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

### இன்றுமுதல்...

வும் செல்லுபடியாகாது என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள் ஒதுக்கீட்டை ஒருவர் பெறுவதற்கு ஒரு வார கால அவகாசம் இருப்பதால் அதிகளவில் கூடி நெரிசலை ஏற்படுத்துவதை தவிர்க்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

இதேசமயம், நேற்றுமுன்தினம் இரவு வரை 1060 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கியூ. ஆர். குறியீட்டு முறை மூலமாக எரிபொருளை விநியோகித்துள்ளன. 11 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்த முறைமையின் கீழ் எரிபொருளை பெற்றுள்ளார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேசமயம், கியூ. ஆர். குறியீடு முறைமை மூலமாக எரிபொருள் பாவனை நடைமுறைக்கு வருவதன் மூலம் எரிபொருளின் பாவனை 70வீதத்தால் குறைக்கப்படும் என்று எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

### நீதிக்கான...

யில் நாட்டின் செல்வாக்கு மிக்கநபர்கள் காணப்படுகின்றனர். இதனால், அது குறித்த உண்மைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெறவில்லை முன்னைய அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க நபர்களும் பாதுகாப்பு திணைக்களத்தை சேர்ந்தவர்களுமே தேவாலயத்தில் கைக்குண்டை வைத்தனர். எனினும், தேவாலயத்தை பராமரிப்பவர்கள் உட்பட அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டனர் அவர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் கையொப்பங்களை பலவந்தப்படுத்தி சில ஆவணங்களில் பெற்றுக்கொண்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இளைஞர்...

கட்டுத்துவக்கால் சுட்டது எனவும் பின்னர் வாளால் வெட்டி படுகொலை செய்த பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இளம் குடும்பஸ்தரான அவரின் உடலில் பல வெட்டுக் காயங்கள் காணப்படுவதுடன் அவரின் கை துண்டிக்கப்பட்டு எடுத்து செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சிதம்பரபுரம் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட தகவலையடுத்து அவரின் சடலம் மீட்கப்பட்டு வவுனியா ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

### கிராம அலுவலர்...

கிடைப்பதை உறுதி செய்வதற்கும், நேர விரயத்தை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எரிபொருள் விநியோகத்தை ஒழுங்கமைப்பதன் ஊடாக இவை இரண்டையும் சாத்தியமாக்க முடியும் என்று நம்பப்படுகின்றது.

ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் சூழவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நேரம் ஒதுக்கப்படும். அந்த நேரத்துக்குள் அங்கு வசிக்கும் மக்கள் தமது வாகனங்களுக்கான எரிபொருளை குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வகையில் எரிபொருள் அட்டையைப் பயன்படுத்தி உறுதிப்படுத்த முடியும்.

ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு வாரத்தில் ஒரு நாள் மாத்திரமே ஒதுக்கப்படும். தேசிய ரீதியிலான 'கியூ. ஆர்' குறியீட்டு நடைமுறைக்கு அமைவாக எரிபொருள் விநியோகிக்கப்படும்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் விநியோகம் எப்போது வரும் என்ற விவரத்தை வெளியிடுவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பவுஸர் வந்தடைந்த மறுநாளே குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலையிலிருந்து மாலை வரையில் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்கும் என்றும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையத்தில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனியான வரிசையைப் பேணுவது தொடர்பிலும், அத்தியாவசிய சேவையினருக்கு தனியான வரிசையைப் பேணுவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. இதுதொடர்பான இறுதி முடிவு இன்று திங்கட்கிழமை எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது. (ஐ)



# ஐ. எம். எவ்விடம் கடன் பெற சீனா முழு ஆதரவளிக்கும்!

## பிரதமரிடம் அந்நாட்டு தூதுவர் உறுதி

கொழும்பு, ஒக. 01

சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ. எம். எவ்) இலங்கை கடன் பெறுவதற்கு சீனா முழுமையாக ஆதரவளிக்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், ஐ. எம். எவ்வின் முன் நிபந்தனையாக மாறியுள்ள கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும் அதேவேளை, இலங்கை அரசு சீனாவிடம் கடன் வரி உள்ளிட்ட நிதி உதவியை நாடியுள்ளது.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் பிரதமரை சந்தித்த சீனத் தூதுவர் கீ சென் ஹொங், ஐ. எம். எவ்வின் கடனைப் பெற உதவியளிக்கும் என்று உறுதியளித்தார்.

சீனா ஐ. எம். எவ். உறுப்புரிமையை கொண்ட முக்கிய நாடுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 26,944 பேர் ஜூனில் புலம்பெயர்ந்தனர்!

கொழும்பு, ஒக. 01

ஜூன் மாதத்தில் 26 ஆயிரத்து 944 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி மே மாதத்தில் 22 ஆயிரத்து 194 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த மாதத்தில் 9 ஆயிரத்து 317 தொழில் புலமையற்ற தொழிலாளர்களாகவும், 7 ஆயிரத்து 977 புலம்பெயர்ந்தவர்கள் தொழில் புலமையுள்ள தொழிலாளர்களாகவும், 6 ஆயிரத்து 556 வீட்டுப் பணியாளர்களாகவும் புலம்பெயர்ந்துள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 06 மாதங்களில் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 701 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வெளிநாட்டு ஊழியர்களின் பணம் ஜூன் மாதத்தில் 274 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மேலும் குறைந்துள்ளது.

இது மே மாதத்தில் 304 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இதற்கிடையில், இந்த ஆண்டு மே மாத சுற்றுலா பயணிகளின் வருகையை விட ஜூன் மாதத்தில் வருகை அதிகரித்துள்ளது.

மே மாதத்தில் 30 ஆயிரத்து 207 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருந்தனர். ஜூன் மாதத்தில் அது 32 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலோனோர் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளாக வந்துள்ளனர்.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் வர்த்தக நிலுவை மிகுதியாகப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி கூறுகிறது.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வளவு மிகுதியாகப் பதிவாகியிருப்பது சிறப்பு.

ஜூன் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பது மற்றும் இறக்குமதி செலவில் தொடர்ந்து குறைந்து வருவதே இதற்குக் காரணம் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

### இலங்கையின்...

திறனை பாதித்துள்ளது. பாடசாலைகள், அரச அலுவலகங்களின் இயக்கங்களைப் பாதித்துள்ளன.

இதேவேளை, இலங்கையில் 63 இலட்சம் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர். இந்த நிலை மோசமடையும் என்றும் உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது. அத்துடன், 67 இலட்சம் மக்கள் போசணைமிகுந்த உணவுகளை உண்பதில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

### 22ஆவது...

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்காக இந்த வரைவு அமைச்சரவையின் செயலாளருக்கு நீதி அமைச்சால் கடந்த வாரம் அனுப்பப்பட்டிருந்தது.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் 7 நாட்களில் 22ஆவது திருத்தச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட 22ஆவது சட்ட வரைவில் உள்ள விதிகள் புதிய வரைவில் நீக்கப்பட்டுள்ளன என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். புதிய வரைவு 19ஆவது திருத்தத்தை பிரதிபலிப்பதாகவும் அதற்கும் அப்பால் செல்லும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

ஈழநாடு
Eelanadu

# அரச கட்டடங்களை கைப்பற்றுவது பயங்கரவாதம் என்கிறது அரசாங்கம்

## கட்சிகளை தடை செய்யவும் திட்டம்

கொழும்பு, ஓக. 01

வன்முறை செயல்களின் மூலம் அரச கட்டடங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் அல்லது ஜனநாயக விரோத முறைகளைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் குழுக்கள், அமைப்புகள் அல்லது அரசியல் கட்சிகளை தடை செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றன என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது அமைந்துள்ள ராஜபக்ஷ பின்னணி அரசை அகற்ற, ஓகஸ்ட் 9 ஆம் திகதி மீண்டும் பொது மக்கள் போராட்டம் நடத்த திட்டமிடப்படும் தகவல் வெளியான பின்னணியில், போராட்டங்களை ஒடுக்க அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரசு கட்டடங்கள் அல்லது நிர்வாக மையங்களை கைப்பற்றி ஆக்கிரமித்து பொது சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பது “பயங்கரவாத நடவடிக்கைகளாக” அறிவிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு உதவும் அல்லது உறுதுணையாக இருக்கும் எந்தவோர் அமைப்பையும் அல்லது அரசியல் கட்சியையும் தடை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பொதுப் பாதுகாப்பு அமைச்சு சட்ட ஆலோசனையை நாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது, பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு பரந்த அதிகாரங்களை வழங்கும் அவசரகாலச் சட்டம் இந்த வாரம் பாராளுமன்றத்தால் ஒரு மாத காலத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஓகஸ்ட் 18 வரை நடைமுறையில் உள்ளது.

இந்த காலப்பகுதியில் ஜூலை 9 மற்றும் 13 க்கு இடையில் நடந்த வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஜூலை 9ஆம் திகதி அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர் பில் தேடப்பட்டு வரும் பிரதான சந்தேக நபர்கள் 14 பேரின் புகைப்படங்களை பொலிஸார் இந்த வாரம் வெளியிட்டுள்ளனர்.

சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, தீ வைப்புத் தாக்குதலில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களிற்கு இலக்கான மேலும் 40 பேரின் புகைப்படங்களை பொலிஸார் எதிர்வரும் நாட்களில் ஊடகங்களில் வெளியிட உள்ளனர்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகாமையில் உள்ள தடைகளை உடைத்து அப்பகுதிக்குள் நுழைந்த சுமார் 300 பேர் மீதும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர்களில் ஒரு பகுதியினர் சுவர்களை தாண்டி குடியிருப்புக்குள் நுழைந்தனர்.

அந்த பகுதியில் இருந்து 20 சந்தேக நபர்களின் கைரேகைகளும் பெறப்பட்டுள்ளன. அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இருந்து 8 பேரினதும், கட்டடத்தின் சில பகுதிகளிலிருந்து 12 பேரினதும் கைரேகைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் போன்றவற்றில் சொத்துக்களை திருடியவர்களைக் கண்டறிய சி. சி. ரீ. வி. மற்றும் காணொலி காட்சிகள் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காணாமல் போன பொருட்களின் பட்டியல் எடுக்கப்பட்டவுடன், இந்த கட்டிடங்களில் காணப்படும் பொருட்களை காணொலி எடுப்பதில் சிக்கிய சந்தேக நபர்களின் புகைப்படங்களையும் அவர்கள் எடுத்ததாகக் கூறப்படும் பொருள் அல்லது பொருட்களின் விளக்கத்தையும் பொலிஸார் வெளியிடுவார்கள் என்று அதிகாரி கூறினார்.

சி. சி. ரீ. வி காட்சிகளைத் தவிர, இந்தக் கட்டடங்களில் இருந்த காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படையினரால் படமாக்கப்பட்ட பல காணொலிகள் விசாரணை அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளன.

இதுபோன்ற பொருட்களை திருடுவது அல்லது பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது தொடர்பாக தேடப்படும் நபர்களை கைது செய்ய வழிவகுக்கும் தகவல்களை வழங்கும் எவருக்கும் வரும் நாட்களில் பணப் பரிசு வழங்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். அரச கட்டடங்களுக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் மீது தனித்தனியாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். (ஐ)

# நாளாந்தம் ஒரு இலட்சம் சிலிண்டர்கள் சந்தைக்கு!

## லிற்றோ நிறுவனம் உறுதி




கொழும்பு, ஓக. 01

எரிவாயு விநியோகத்தை கட்டம் கட்டமாக வழமைக்கு கொண்டு வருவோம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம். இனிவரும் நாட்களில் நாளாந்தம் ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

எரிவாயு விநியோக கட்டமைப்பு தொடர்பில் செய்தியாளர களுக்கு கருத்து வெளியிட்ட அவர், எரிவாயு விநியோகத்தை கட்டம் கட்டமாக வழமைக்கு கொண்டு வருவோம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுயள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த மாதம் மாத்திரம் சந்தைக்கு சுமார் 20 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் நாளாந்தம் ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க தீர்மானித்துள்ளோம். அத்துடன், எதிர்வரும் 4 மாத காலத்துக்கு எரிவாயு விநியோக கட்டமைப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

நுகர்வோர் கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டரை விற்பனை செய்யும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை முன்னெடுக்குமாறு உரிய தரப்பினரிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

# பிரதமர் அலுவலகம் அருகே கார் திடீரென தீப்பற்றியது

கொழும்பு, ஓக. 01

பிரதமர் அலுவலகத்துக்கு எதிரே உள்ள உணவகம் அருகே நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று நேற்று திடீரென தீப்பிடித்து எரிந்ததுள்ளது.

காரை இயக்கசெய்ய முற்பட்ட போது, கார் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரியவருகிறது. குறித்த காரின் முன் பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் பாதுகாப்பு படையினரின் தலையீட்டில் கொழும்பு நகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்தி தீ அணைக்கப்பட்டது. (ஐ)

# நெடுங்கேணியிலிருந்து மட்டக்களப்புக்கு சைக்கிளில் தனித்து சென்ற சிறுவன் மீட்பு

## மாற்றாந்தாய் கொடுமையே காரணமாம்

வவுனியா, ஓக. 01

மாற்றாந்தாயின் துன்புறுத்தல்கள் தாங்க முடியாமல் வவுனியா நெடுங்கேணியில் இருந்து மட்டக்களப்பு வாழைச்சேனைக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த 14 வயதான சிறுவன் கெப்பிட்டிக்கொலாவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா கெபிட்டிக்கொலாவை பிரதான வீதியின் புளியங்குளம் காட்டுப் பகுதியில் சிறுவன் ஒருவர் தனித்து சைக்கிளில் செல்வதை பிரதேசவாசிகள் அவதானித்து, சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

பொலிஸார் சிறுவனை மீட்டு, நடந்த சம்பவம் குறித்து கேட்டபோது, நெடுங்கேணியிலுள்ள மாற்றாந்தாயின் கொடுமை தாங்க முடியாமல், மட்டக்களப்பு, வாழைச்சேனையிலுள்ள தாயாரிடம் சைக்கிளில் புறப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

நெடுங்கேணியில் இருந்து வாழைச்சேனை சுமார் 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி

ஓம் ரிவி நடாத்தும்

சைவம் தழைத்தோங்க....
சமய அறிவுப் போட்டி

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு ‘சைவக்களஞ்சியம்’ என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.

செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் நடாத்தும்
சமய அறிவுப்போட்டி
ஆலய கிழக்கு வீதியில் அமைந்திருக்கும்
பரமேஸ்வரி மண்டபத்தில்
தினமும் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

போட்டி தொடர்பான விதி முறைகள்

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
07.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் வியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு
ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஒத்த செருப்பு சைஸ்-
07, ஹீரோ
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் டைம்
06.30 மணி : நலந்தானா



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டை டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு